
# திருக்கோயில்



ஜனவரி
1999

விலை
ரூபாய் ஐந்து





பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த திருஆவினன் குடி அருள்மிகு குழந்தை வேலாயுதசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 25.11.98 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் இணை ஆணையாளருமான திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்களும், அறங்காவலர் பெருமக்களும் இவ்விழா ஏற்பாடுகளை மிகச்சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

**திருக்கோயில் வாசகர்களுக்கு 1999 புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்**



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 | வெகுதானிய ஆண்டு தை<br>ஜனவரி 1999 | மணி 1 |
|---|---|---|---|


## சிறப்பாசிரியர்

சுகவனேஸ்வர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.,

## திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

திரு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

திரு மு. இராமச்சந்திரன், பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு ரா. ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

### முகப்பு

அருள்மிகு பழநி மலைக்கோயிலும்
அடிவாரத்தில் உள்ள திருவாவினன் குடி
திருக்கோயிலும்

## பொருளடக்கம்


மங்கல மார்கழியும் திருவெம்பாவையும்
முனைவர் த. அமிர்தலிங்கம்

அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
ஆடல் வல்லானும் ஆதிரைச் சிறப்பும்
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

அற்புதத் தெய்வம் ஆனந்த மூர்த்தி
நடராசன் அடிமை

கம்பரின் கைவண்ணத்தில் பரதன்
- முனைவர் இரா. செல்வகணபதி

கம்பனும் திருமுறைகளும்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

திருவண்டப் பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்
- மு.பெ. சத்தியவேல் முருகன்

கந்தர்கலிவெண்பாவில் வேண்டுகோள்
- கலைமாமணி அ. அருளரசு மாசிலாமணி

பொது நடம்
- பேராசிரியர் க. ஆறுமுகம்

தமிழ்நாட்டின் தன்னிகரில்லாக் கவிஞன்
- அங்கயற்கண்ணி அடிமை

வாசகர் எண்ணங்கள்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# மங்கல மார்கழியும் திருவெம்பாவையும்

## முனைவர் த. அமிர்தலிங்கம்

''மாதங்களில் நான் மார்கழியாகத் திகழ்கிறேன்'' என்பது கண்ணபெருமான் பகவத்கீதையில் அருளியிருக்கும் திருவாக்காகும். தேவர்களுக்கு விடியற்காலையாகிய இந்த மார்கழியில் நோன்பு நோற்பது இரண்டு முக்கிய பலன்களை நமக்கு நல்கும். முதல் பலனாக நாட்டிற்கு நல்ல மழை பொழியும். இரண்டாவது பலனாக நோன்பிருப்பார்க்கு நல்ல வாழ்க்கைத் துணை கிட்டும். இந்த மார்கழி மாதம் வந்து விட்டால் கன்னிப் பெண்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான். மாதம் முழுவதும் பாவை நோன்பிருந்து அடுத்துப் பிறக்கும் தையில் தங்கள் வாழ்விற்கு வழி பிறக்க வேண்டும் என்பதாக அவர்கள் இறைவனை வணங்கி வேண்டுவார்கள்.

கன்னிப் பெண்கள் குதுகலமாக இவ்வாறு மார்கழி நோன்பிருப்பதை மாணிக்க வாசகசுவாமிகளும், ஆண்டாளும், திருவெம்பாவையாகவும் திருப்பாவையாகவும் வடித்திருக்கிறார்கள். நாம் மாணிக்க வாசகரின் திருவெம்பாவையிலிருந்து மார்கழி நோன்பின் மகத்துவத்தைக் காண்போமாக.

ஒரு தெருவில் இருக்கும் அத்தனைக் கன்னிப் பெண்களுமாகச் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு விடுகிறார்கள். யார் முதலில் விழித்தாலும், மற்றவர்களையும் விழிக்கச் செய்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு, எல்லோருமாக ஒருசேரப் போய் ஆலயத்திருக்குளத்தில் நீராடிப் பின் சிவபெருமானைத் தொழவேண்டும், இதில் யாரும் தவறக்கூடாது என்பது தான் அவர்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தின்படி முதலில் விழித்தெழும் கன்னிப் பெண்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கும் தோழிப் பெண்களை எழுப்ப வருகிறார்கள். அவ்வாறு வருகிறபோதே அவர்கள் ஈசனின் புகழைப் பாடிக் கொண்டே வருகிறார்கள். ஈசன் புகழை வீதியின் கடைசியில் பாடக் கேட்டபோதும் ஒரு நங்கை, மெய்ம்மறந்து, பக்திப் பரவசமுற்றுப் படுக்கையிலே இருந்து புரண்டு கீழே விழுந்து ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என வாழ்த்தியபடி விழித்தெழுவது ஒரு வீட்டில் நடைபெறும் காட்சி. ஆனால் இன்னொரு வீட்டிலோ இதற்கும் நேர்மாறான கூத்து. அந்த மங்கை தன்னுடைய பாசமெல்லாம் ஈசன் மேல்தான் என்று வார்த்தைகளை அளந்திருக்கிறாளே தவிர, தோழிகள் போய் எழுப்பியும் அவள் எழாமல் படுக்கையின் மேல் பாசம் வைத்து, தூங்கியவாறே இருக்கிறாள். ''வாள் தடங்கண் மாதே வளருதியோ? வன்செவியோ நின் செவிதான்'' ''பாசம் பரஞ்சோதிக் கென்பாய், இராப் பகல் நாம் பேசும்போது; எப்போது இப்போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ?'' என்று தோழிகள் கேலிபேச, அதற்குப் பிறகே விழித்துக் கொள்ளும் அந்த நங்கை வெட்கத்திற்காளாகி, ''நாமெல்லாம் சிவபெருமானுடைய அடியார்கள். இப்படி கேலிகள் செய்யலாமோ?'' என்று நயம்பட வினவிப்பின் புறப் படுவதைக் காணுகின்றோம்.

இன்னொரு வீட்டில் இருக்கும் பெண் ஒருத்தி, அவள் முதல்நாள் தன்னை வந்தெழுப்பிய தோழிகளிடம் ''நாளை உங்களுக்கு முன் விழித்தெழுந்து, நான் வந்து பதிலுக்கு உங்களை எழுப்புவேன்'' என்பதாகக் கூறியிருந்தாளே ஒழிய அவ்வாறு செய்யவில்லை. அவளுடைய குற்றத்தையும் தோழிகள் சுட்டிக் காட்டிக் கேலி செய்யும் போது ''புதியதாக மார்கழி நோன்பை நோற்கத் தொடங்கியுள்ளவள் நான், என் குற்றத்தைப் பொறுத்து ஆட்கொள்ளக் கூடாதோ'' என்று அவளும் நயம்படப் பேசித்தோழிகளைச் சமாதானப்படுத்திப் பின் அக்கூட்டத்தில் தானும் சேர்ந்துகொள்கிறாள். ''புத்தடியோம் புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ?'' எனவரும் திருவெம்பாவைத் தொடரால், சபரிமலைக்குச் செல்லும் கன்னிசாமிகளைப் போலவே, மார்கழி நோன்பினையும் ஆண்டுதோறும் புதிது புதிதாகத் தொடங்கும் கன்னிப்பெண்கள் இருந்திருப்பதைத் தெளிகிறோம்.

இன்னொரு வீட்டுப் பெண், தோழிகள் எழுப்பவும் கூட எழாமல், ''எல்லோரும் வந்தாயிற்றா? எல்லோரும் வந்த பிறகு விழிக்கிறேன், அதுவரை தூக்கத்தைக் கலைக்காதீர்கள்'' என்று வேண்டுவது ஒரு வேடிக்கைதான். விண்ணுக்கொரு மருந்தாக, வேத விழுப்பொருளாக, கண்ணுக் கினியானாக உள்ள இறைவனை நொடி நேரமும் வீணாக்காமல் தொழுவதைப் பேறாகக் கருதும் பெண்கள் ''எல்லோரும் வந்தார்களா என்று எண்ணிக்கொண்டிருப்பதும் கூட கால விரயம்தான். அதைச் செய்யமாட்டோம், நீ உடன் வந்தால் வா'' என்று கூற, அதற்குப் பிறகே கும்பகருணனின் தங்கையான அந்த நங்கை எழுந்து தோழிகளைத் தானும் பின் தொடருகிறாள்.

முன்னிரவு, நடுஇரவு, தூக்கங்களை விடப் பின்னிரவு தூக்கம் எப்பொழுதும் சுகமாகத்தான் இருக்கும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் எப்படித் தம்மைக் கொண்டாரை எளிதில் விடாதோ அவ்வாறே உறக்கமும் கூட, எளிதில் தான் பற்றினாரை

விடாது. ஆனால் அத்தகைய உறக்கத்திலிருந்தும், மாயையிலிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ள, நாம் பயிற்சி பெறும் மாதம் தான்இந்த மார்கழி மாத மாகும். ''என்னே துயிலின் பரிசு'', ''ஈதென்ன உறக் கமோ!'' என்று மணிவாசகரும் தூக்கத்தின் கொடுமை யைக் கூறி, பக்திமார்க்கத்தால் துயில்களைய நம்மை அழைக்கிறார். மாயையாகிய தூக்கத்தில் ஆழ்ந்த வரை போதும், இனியாவது இறைவனின் திருப்பாதம் பணிய வேண்டும் என்ற தத்துவத்தை வலியுறுத்துவனவே திருவெம்பாவையிலுள்ள துயில் களையும் பாடல் கள்.

ஒரு வழியாக நித்திரை நீங்கி, நங்கையர் எல் லாம் ஒருசேரத் திரண்டாயிற்று, இனி நீராட அவர்கள் ஆலயத் தடாகத்திற்குச் செல்லுகிறார்கள். செல்லும் போதே தமக்கு என்ன வரம் ஈசன் தர இருக்கிறான் என்பதை நினைத்தவர்களாய் மகிழ்ந்து,

''முன்னைப் பழம் பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப்
பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர்
ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப்
பணி செய்வோம்
இன்னவகையே
எமக்கெங்கோன் நீநல்குதியேல்
என்ன குறையும் இலோம்
ஏலோர் எம்பாவாய்''

என்று பாடியவாறே செல்கிறார்கள். சிவன் மேல் பற்றுக் கொண்ட பக்தைக்குச் சிவன்மேல் பற்றுக் கொண்ட பக்தனே மணமகன் ஆகவேண்டும். நெறி வேறானால் சிந்தையும் வேறுபட்டு, வாழ்க்கைச் சாரமற்றுப் போய்விடும். ஆகவே, தான் சிவனடியாரே தமக்கு வாழ்க்கைத்துணையாக வேண்டும் எனக் குறிப் பிட்டு வரம் வேண்டுகின்றனர் அந்தப் பாவைகள்.

தமக்கு வாழ்க்கைத் துணையை வேண்டுவ தோடு நின்று கொண்டுவிடவில்லை அப்பெண்கள். நாடு வாழ்ந்தால்தானே வீடும் வாழும். நாடு வாழ இன்றியமையாது மழையும் வேண்டும். மேகங்கள் அன்னை பார்வதியின் கருநிறம் கொண்டு திரண்டு, அன்னையின் இடையைப் போல மின்னலும் மின்னி, அன்னையின் பாதச் சிலம்புகளின் ஒலியைப் போல இடியும் ஒலிக்க, அவள் அன்பருக்காகச் சுரக்கும் அருளே போல் மழைபொழிய வேண்டும் என்று கேட்டுக் கன்னிப் பெண்கள் மழையையும் வேண்டிப் பாடுவது, அவர்களின் சுயநலமில்லா கருணைக் குணத்தை நமக்கு உணர்த்தி மகிழவைக்கிறது.

திருவெம்பாவையில் சிவபெருமானின் திருக் கருணை மிகப் பலவாறாகப் பாராட்டிப் பேசப்படு கிறது. அத்தன், ஆனந்தன், அமுதன் என்று அள் ளூறித்தித்திக்கத் தித்திக்க மாணிக்கவாசகர் திருவண் ணாமலையில் செய்தருளிய இத்திருவெம்பாவையில் ஈசனின் அடியையும் முடியையும் திருமாலும் பிரம னும் தேடி காணாமல் வாடிய அந்த வரலாறு மிகப் பல இடங்களில் பாராட்டிப் பேசப்பட்டுள்ளது.

''ஆதியும் அந்தமும்இல்லா அருட்பெருஞ் சோதி''
''மாலறியா நான்முகனும் காணா மலை''
''பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவுப் பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப்
பொருள் முடிவே''

இப்படி ஈசனார் கொண்ட விசுவரூபம் திருவெம்பா வையில் விவரிக்கப்படுகிறது. திருமாலுக்கும், பிரம னுக்கும் தான் ஈசன் எட்டாதவனே தவிர அன்பர் களுக்குத் தானே வந்து வரம் அளிக்கும் வள்ளல். ''இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்க மலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்''.. சேவகன் என்று ஈசனார் அருள் புரியும் திறத்தைக் கூறி அற்புத மாகப் பாடியிருக்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவனை அடைக்கலம் அடைந்துவிட் டால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை. நான் முகன் கல்விச் செருக்கினால், தான் பெரியவன் என்று தருக்கி சிவபெருமானின் முடியைத் தேடினான், காண முடியவில்லை. திருமாலும் செல்வச்செருக்கினால் தான் பெரியவன் என்று தருக்கி, அடியைத் தேடினான். ஈசன் அகப்படவில்லை. ஆனால் அன்பைத் துணை கொண்டு தேடும் அடியவர்க்கோ, தானே இல்லங்கள் தோறும் எழுந்தருளி, அருள் சுரக்கின்றான்.

மும்மலங்களாகிய தூக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். இறைவனின் அரு ளாகிய தடாகத்தில் அவன் புகழைப்பாடிப் பாடி நீராட வேண்டும். மார்கழி நோன்பும், மார்கழி நீராடலும் இவ்விரண்டையும் வற்புறுத்துவதே, இவ்வாறு நீராடி னால் பிறவித் துயர் கெடும், முத்தி பதம் கிட்டும், பேரின்பப் பெருவாழ்வில் நீடித்த சுகம் காணலாம். இறைவனே தலைவன், ஆண்களும் பெண்களுமாகிய மானிட உயிர்கள் அனைத்துமே தலைவனின் தண்ண ளியை வேண்டிப் பாடும் பாவைகள். ஆகவே கன்னி யர்க்கு மட்டுமே உரியதல்ல மார்கழி நோன்பு. நம் அனைவருக்குமே உரிய இந்நோன்பை நோற்று நாமும் மணிவாசகர் பிடித்தவாறு சிவனாரின் பாதங்களைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு உய்வோமாக.

''போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்''

# அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி

## அருள்வேண்டுதல் (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில் ................ அவர்கட்கும்
அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்
சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,
பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனும்
பொருந்தி
நன்னிலை பெருகவும், நீண்ட வாழ்நாள்
பெருகவும், திருவருள் பெருகவும், மங்கள
வாழ்வெய்தவும் உம் திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

## அருள்மிகு தென்முகக்கடவுள் 8 போற்றிகள்

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் அறம் முதல் நான்கும் அருளினாய் போற்றி
3. ஓம் ஆலின்கீழ் நால்வர்க்கு அருளினை போற்றி
4. ஓம் சின்முத்திரை அருளும் சிவனே போற்றி
5. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
6. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
7. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
8. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

## அருள்மிகு தென்முகக்கடவுள் 16 போற்றிகள்

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி
3. ஓம் ஆலின்கீழ் நால்வருக் கருளினை போற்றி
4. ஓம் உபதேச கலையின் ஒளியே போற்றி
5. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
6. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி
7. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி
8. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
9. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
10. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
11. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
12. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
13. ஓம் மூன்று விரல் முகிழ்த்தாய் போற்றி
14. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
15. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
16. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

## அருள்மிகு தென்முகக் கடவுள் 108 போற்றி

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் அநாதியாம் முப்பொருள் காட்டினாய் போற்றி
3. ஓம் அநாதியே உற்ற தெய்வமே போற்றி
4. ஓம் அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
5. ஓம் அருளாய் நிறைந்த அமுதே போற்றி
6. ஓம் அருளே முதலாய் ஆனாய் போற்றி
7. ஓம் அலைபுனல் சூடிய அரனே போற்றி
8. ஓம் அருளே முதலாய் ஆனாய் போற்றி
9. ஓம் அறம்முதல் நான்கும் அருளினாய் போற்றி
10. ஓம் அறிஞர்க் கறிவாய் நின்றாய் போற்றி
11. ஓம் அறிவின் உருவாய் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் அற்புதம் நிகழ்த்தும் அருளே போற்றி
13. ஓம் ஆகமம் ஆகி அண்ணிப்பாய் போற்றி
14. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி
15. ஓம் ஆணையால் உலகை ஆள்வாய் போற்றி
16. ஓம் ஆதிபகவனாய் அமர்ந்தாய் போற்றி
17. ஓம் ஆதியாய் நின்ற அமலா போற்றி
18. ஓம் அரியா னாகி அருளினை போற்றி
19. ஓம் ஆலின்கீழ் நால்வருக் கருளினை போற்றி
20. ஓம் ஆனந்த அருள்மழைக் கண்ணாய் போற்றி
21. ஓம் ஆன்மப் பொருளைத் துலக்கினாய் போற்றி
22. ஓம் இசையில் திளைத்த இசைவே போற்றி
23. ஓம் இடதுகால் ஊன்றிய ஏந்தலே போற்றி
24. ஓம் இருமையை நீக்கும் இடையே போற்றி
25. ஓம் இன்ப உருவின் எழிலாய் போற்றி
26. ஓம் உபதேசக் கலையின் ஒளியே போற்றி
27. ஓம் உயர்வுறு பரமகுருவே போற்றி
28. ஓம் உயிர்க்கெலாம் உயிராய் நின்றாய் போற்றி
29. ஓம் உருவெலாம் கடந்த ஒருவ போற்றி
30. ஓம் ஏகன் அனேகன் இறைவ போற்றி
31. ஓம் ஏகாந்த அனுபவம் இயற்றுவாய் போற்றி
32. ஓம் ஒளிமயமான உருவ போற்றி
33. ஓம் ஒன்றான ஆனந்த உருவே போற்றி
34. ஓம் ஓங்கார நாதத்து ஒருவ போற்றி
35. ஓம் ஓங்கு குருபர நாதனே போற்றி
36. ஓம் ஓங்குயிர் ஞான சிவமே போற்றி
37. ஓம் ஓம்எனும் பிரணவம் உணர்த்தினாய்போற்றி
38. ஓம் ஓம்பரப் பிரம்ம ஒளியே போற்றி
39. ஓம் ஔவியம் போக்கும் அருளே போற்றி
40. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
41. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி

42. ஓம் கருணைக்கடலாய் நின்றாய் போற்றி
43. ஓம் கலையெல்லாம் புனைந்த கவினே போற்றி
44. ஓம் கல்லாடை புனைந்த கவினே போற்றி
45. ஓம் கல்லாலின் கீழமர் கடவுள் போற்றி
46. ஓம் சச்சினாந்த சிவமே போற்றி
47. ஓம் சதாசிவத் தென்முகக் கடவுள் போற்றி
48. ஓம் சரியை முதல் நான்கும் தந்தாய் போற்றி
49. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி
50. ஓம் சித்தம் மருவும் செம்பொருளே போற்றி
51. ஓம் சித்தர்கட் கெல்லாம் சிற்குரு போற்றி
52. ஓம் சித்தி அருள் முத்திரையாய் போற்றி
53. ஓச் சித்திகள் பலவாய்த் திகழ்வாய் போற்றி
54. ஓம் சிந்தனைக் கரிய சிவமே போற்றி
55. ஓம் சிவஞானப் புத்தகம் ஏந்தினாய் போற்றி
56. ஓம் சிவயோக நிலையருள் செல்வா போற்றி
57. ஓம் சின்முத்திரை அருள் சிவனே போற்றி
58. ஓம் சுட்டு விரலாற் சுட்டுவோய் போற்றி
59. ஓம் சொற்பதம் கடந்த தொல்லோய் போற்றி
60. ஓம் ஞானத்து உறவை நல்குவாய் போற்றி
61. ஓம் ஞானத்தொரு தெய்வம் ஆனாய் போற்றி
62. ஓம் ஞானம் விளக்கும் நாயகா போற்றி
63. ஓம் தத்துவ விளக்கம் காட்டினாய் போற்றி
64. ஓம் தந்திர கலைதனைத் தந்தாய் போற்றி
65. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
66. ஓம் தவமெலாம் போற்றும் தவமே போற்றி
67. ஓம் தற்பதப் பொருளாய் நின்றாய் போற்றி
68. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
69. ஓம் தீரத் துறந்த திருவே போற்றி
70. ஓம் துரியம் கடந்த சுடரே போற்றி
71. ஓம் தூண்டா விளக்கின் சோதி போற்றி
72. ஓம் தூய நன்ஞானச் சுடரே போற்றி
73. ஓம் தெற்கமர் பரம பதியே போற்றி
74. ஓம் தேவர்கட் கெல்லாம் தேவனே போற்றி
75. ஓம் தூயனாய்த் துணையாய் நின்றாய் போற்றி
76. ஓம் நவயோக நந்தியாம் நாத போற்றி
77. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
78. ஓம் நாகப் புரியணி நாதா போற்றி
79. ஓம் நிலவை முடியில் நிகழ்த்தினாய் போற்றி
80. ஓம் நிறைவாய் நின்ற நிலையே போற்றி
81. ஓம் நிறைவுறு ஞானப் பொலிவே போற்றி
82. ஓம் நீறணி நெற்றிக் கண்ணாய் போற்றி
83. ஓம் பசுபதியாய் நின்ற பரம போற்றி
84. ஓம் பத்தி நெறிக்கோர் வித்தகா போற்றி
85. ஓம் பரஞானச் செஞ்சுடர் பரம போற்றி
86. ஓம் பரமபதி யெனும் பக்குவ போற்றி
87. ஓம் பரமானந்தப் பரமனே போற்றி
88. ஓம் பன்முக ஞனாம் பரப்பினாய் போற்றி
89. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
90. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
91. ஓம் பொய்த்தவப் போக்கைப் போக்குவாய் போற்றி

## தண்டமிழின் பெருமை

தொண்டர் நாதனை தூதிடை
விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத்
திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர்

- திருவிளையாடல் புராணம்

92. ஓம் மங்கலம் கருதும் சங்கரா போற்றி
93. ஓம் மந்திரக் கலையில் மகிழ்ந்தாய் போற்றி
94. ஓம் மலமாயை கன்மம் மாற்றினாய் போற்றி
95. ஓம் மறையெலாம் புகழும் மணியே போற்றி
96. ஓம் மனக்கவலை மாற்றும் மருந்தே போற்றி
97. ஓம் முதுமறை நான்காய் முகிழ்த்தாய் போற்றி
98. ஓம் மும்மலப் பேயை முனிவாய் போற்றி
99. ஓம் முயலகன் மேல் கால் ஊன்றினாய் போற்றி
100. ஓம் முனிவர்க்கே ஞானம் மொழிந்தாய் போற்றி
101. ஓம் மூன்று விரலை முகிழ்த்தாய் போற்றி
102. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
103. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
104. ஓம் வலக்கால் மடித்து வைத்தவா போற்றி
105. ஓம் வன்பெலாம் தீர்க்கும் மருந்தே போற்றி
106. ஓம் வான்பொருள் வழங்கும் வள்ளலே போற்றி
107. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
108. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

பாடல் : தென்முகக் கடவுள்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

- பரஞ்சோதி முனிவர்

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு தென்முகக் கடவுள் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்களம் உண்டாகுக. ★★

# ஆடல் வல்லானும் ஆதிரைச் சிறப்பும்

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A;D. Litt; Ph.D.;

வலக்கரத்தில் 'துடி' அல்லது உடுக்கையையும், இடக்கரத்தில் அக்கினியையும், ஏந்திப் பிறிதோர் வலக் கரத்தால் அபயமுத்திரை காட்டி அவ்வாறே பிறி தோர் இடக்கரத்தால் தனது தூக்கிய திருவடியைக் காட்டி, தாண்டவக் கோலத்தில காட்சி தருவார் நட ராஜர். அரங்கில் ஆடுவதால் இவரை சபாபதி என்றும் கூறுவர். தமிழில் கூத்தப்பிரான் என்றும் திருச் சிற் றம்பலக் கூத்தர் என்றும் குறிப்பிடுவர்.

''தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

என உண்மை விளக்கமும்

''அரன்துடி தோற்றம், அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற்றணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்றே.''

எனத் திருமந்திரமும் நடராஜ தத்துவத்திற்கு விளக்கம் பகருகின்றன.

அதாவது,

உடுக்கை சிருஷ்டி அல்லது படைத்தலையும்,
அபயக்கரம் ஸ்திதி அல்லது காத்தலையும்,
மழு அல்லது அக்கினி, சம்ஹாரம் அல்லது
அழித்தலையும்,
ஊன்றிய திருவடி திரோதானம் அல்லது
மறைத் தலையும்
தூக்கிய திருவடி அனுக்கிரஹம் அல்லது
அருளுதலையும்

குறிப்பால் உணர்த்துகின்றன. இவ்வைந்தையும் பஞ்சகிருத்யம் அல்லது ஐந்தொழில் என்று கூறுவர்.

நடராசர் அல்லது ஆடல்வல்லான் திருவுருவத் தைச் சுற்றி அமைந்திருக்கும் திருவாசி பிரணவத்தின் வடிவாகும். திருவாசியில் தீச்சுடர்போல் தென்படும் அமைப்புகள் மந்தர மாத்ருகா அட்சரங்கள் என்னும் மூலமந்திர எழுத்துக்களைக் குறிக்கின்றன.

உலகத்தில் தோற்றம் இயக்கம் முதலிய அனைத்துத் தத்துவங்களும் அடக்கம். ஆதலால் மேல் நாட்டினர் அவரது நடனத்தை "COSMIC DANCE' என்று கூறிப் புகழ்ந்து, வியந்து பாராட்டுகின்றனர்.

நடராஜரின் இடப்பக்கத்தில் நிற்பவளே 'சிவ காமசுந்தரி' எனப் போற்றப்படும் அம்பிகையாவாள். எல்லாத் திருக்கோயில்களிலும் நடராஜர் சந்நிதி தெற்கு நோக்கியே அமைந்திருக்கும். பூஜைக்குரிய நடராஜர் திருமேனி பெரும்பாலும் பஞ்சலோகப் படிவமாகத் தான் இருக்கும்.

உத்தர கோசமங்கை, பரமக்குடி மற்றும் தஞ்சை மாவட்டம் நாச்சியார்கோவிலை அடுத்த கூகூர் போன்ற சில இடங்களில் நடராஜ மூர்த்தம் கற்சிலைகளாக அமைந்து வழிபடப்படுகின்றன.

இந்திய நாட்டுத் தெய்வத் திருவுருவங் களில் மேல்நாட்டினரைப் பெரிதும் கவர்வது நடராஜ மூர்த்தமேயாகும்.

இலங்கை யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள கீரிமலை கோயிலில் உள்ள நடராஜர் படிமம் சடை யில்லாமல் காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர் கொல்லிமழவன் மகளின் வலிப்பு நோய் தீர்த்த பாச்சிலாச்சரமத்து நடராஜர் பாதத்தின் கீழே முயலகன் இல்லை.

தில்லை நடராஜர் சந்நிதியை அடைய ஐந்து படிகள் ஏறவேண்டும். அவை சிவபெருமானின் ஐந் தெழுத்தை உணர்த்தும், பஞ்சாட்சரப் படிகள்' எனப் படும்.

தமது திருவாசகத்தில் பொருள் ''இவனே!'' எனத் தில்லையம்பல வாணனைச் சுட்டிக்காட்டி னார் மாணிக்கவாசகர். தேவாரப் பதிகங்களும் தில்லை யிலிருந்து எடுக்கப்பட்டே உலகுக்கு அளிக்கப் பட்டன. ஆகவே, மணிவாசகர் படிமமும் பன்னிரு திருமுறைகளும் நடராஜர் சந்நிதியில் இடம்பெறு தல் சிறப்புடையதாகும். அவை இல்லாத இடங் களில் அவற்றைப் பிரதிஷ்டை செய்ய சைவப் பெரி யோர்கள் முயன்றுவருகின்றனர். அம்முயற்சி ஒரு சமயச்சடங்கு மட்டுமன்று. பண்பாட்டையும், இலக்கி யங்களையும் பேணிக்காத்து எதிர்காலத்துக்கு அளித் திடும் வரலாற்றுச் சான்றாகவே அமையும்.

இருபத்தேழு நட்சத்திரங்களில் இரண்டு மட்டுமே 'திரு' என்ற சிறப்பு அடைமொழியுடன் குறிப்பிடப்படுகின்றன. அவை திருவோணமும் திருவாதிரையுமே ஆகும். திருவோணம் திருமாலுக்கு உகந்தது. அவ்வாறே, திருவாதிரை சிவபெருமானுக்கு-குறிப்பாக நடராஜப் பெருமானுக்கு உகந்ததும் உரியதும் ஆகும். அவனை ஆதிரையான் என்றே அழைப்பதுண்டு.

மார்கழித் திருவாதிரையில் மட்டுமே தில்லை நடராஜரும் மற்றத் திருக்கோயில் நடராஜர்களும் வீதி உலாவாக எழுந்தருளுவர். வேறுநாட்களில் வீதியுலாக் கொள்வதில்லை.

திருக்கோயில்களில் ஆண்டுப் பெருவிழா நிறைவுக்கு அடுத்தநாள் தீர்த்தவாரிக்கு நடராஜர் தரிசனம் உண்டு என ஆகம சாஸ்திரங்கள் உரைக்கின்றன. எனினும் அப்போது மூலஸ்தான நடராஜர் எழுந்தருளமாட்டார். அதற்கெனச் சிறிய நடராஜர் மூர்த்தம் வைத்திருப்பது வழக்கம்.

இறைவன் நடராஜராக ஆடிக்கொண்டிருக்கும் சிதம்பரம், கனகசபை அல்லது பொன்னம்பலம் எனப்படும். அதுவே ஆகாயத்தலம் என்றும் விராட புருஷனின் இதயத்தானம் என்றும் போற்றப்படுகிறது.

காரைக்கால் அம்மையார் போற்றிப் புகழ்ந்த திருவாலங்காடு இரத்தினசபை ஆகும்.

மதுரையில் அவன் ஆடும் சபை இரஜதசபை அல்லது வெள்ளியம்பலம் ஆகும்.

திருநெல்வேலியில் இறைவன் தாமிரசபையில் ஆடுகிறான்.

திருக்குற்றாலத்தில் அவன் ஆடும் சபை சித்திரசபை ஆகும்.

மேலும் அவன் பதினொரு வகையான நடனங்களை வெவ்வேறு இடங்களில் ஆடுகிறான். அவை முறையே:

1. தில்லை - ஆனந்தத் தாண்டவம்.
2. திருவாலங்காடு - காளிபங்க நடனம்.
3. திருமுண்டீச்சரம் - அழகிய தாண்டவம்.
4. திருவாரூர் - அஜபா நடனம்
5. திருநள்ளாறு - உன்மத்த தாண்டவம்.
6. திருக்கார வாயல் - குக்குடத் தாண்டவம்
7. திருமறைக்காடு - அம்சபாத நடனம்
8. திருக்கோளிலி - பிருங்கி (வண்டு) நடனம்.
9. ஆனந்தத்தாண்டவபுரம் - முகமண்டல தாண்டவம்.
10. மதுரை - கால் மாறிய நடனம்.
11. பேரூர் - ஊர்த்துவ தாண்டவம்.

கீழ்க்காணும் ஏழுமட்டுமே ஆகமங்கள் அங்கீகரித்த நடனங்கள் எனக் கூறுவர்.

1. திருநெல்வேலி - முனிதாண்டவம்.
2. திருப்பத்தூர் - கௌரி தாண்டவம்
3. மதுரை - சந்தியா தாண்டவம்
4. திருவாலங்காடு - ஸம்ஹாரத் தாண்டவம்
5. சிதம்பரம் - ஆனந்தத் தாண்டவம்
6. பேரூர - ஊர்த்துவ தாண்டவம்
7. திருக்குற்றாலம் - திரிபுரத் தாண்டவம்

மாத்யந்த முனிவரின் குமாரர் இறைவனின் தாண்டவத்தைக் காணத்தில்லை வந்தார். தரிசனம் பெற்றார். இறைவனுக்குரிய புதுமலர்களை மரத்தில் ஏறிப் பறிக்கப் பெற்றார். இவரே புலிக்கால் முனிவர் அல்லது வியாக்கிர பாதர் என்று பெயர் பெற்றார்.

தில்லையில் திருமால் கண்ட தாண்டவத்தைத் தாமும் காணவிரும்பிய ஆதிசேஷன் திருமாலின் அனுமதியுடன் தில்லை வந்தார். பாதி பாம்பு உருவுடன் இருக்கும் இவரே பதஞ்சலி முனிவரானார். இவ்விருவரும் ஆத்மபூஜை செய்து தில்லையம்பலவனை வழிபட்டனர். அத்திருத்தலங்கள் முறையே திருப்புலீச்சரம் மற்றும் திரு அனந்தேச்சுரம் என்று பெயர்.பெற்ற திருக்கோயில்களாகும்.

''அஞ்சொலாள் காண ஆடும் அழகன்'' என்று அப்பர்போற்றுகிறார். அவன் ஆடும் அழகைக் காணும் வாய்ப்புப் பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டத்தக்கதே என அவர் உரைக்கிறார்.

தில்லையில் ஆடும் அழகனின் திருமுடியில் விடும் அபிஷேகப் பொருட்கள் அவனது சிரத்திலிருந்து கரத்தின் வழியே தூக்கிய திருவடியில் வழிந்து வரும் அற்புதக்காட்சியைக் காணலாகும்.

மயிலை வெள்ளீச்சரத்துக் கூத்தப்பெருமானின் தூக்கிய திருவடிக்கும் அதனைச் சுட்டும் கரத்துக்கும் உள்ள இடைவெளி மிகக்குறைவு. இங்கும் அபிஷேகப் பொருட்கள் தூக்கிய திருவடி வழியே வரும் இனிய காட்சியைக் காணலாம்.

சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் நடராஜரை 'ஆடல்வல்லான்' என்று தமிழில் குறிக்கின்றன. 'ஆடல்வல்லான் மரக்கால்' என அவர்கள் அளவைக் கருவிகளுக்குக் கூடப் பெயரிட்டிருந்தனர்.

மார்கழித் திருவாதிரையில் ஆடல்வல்லானை கண்குளிர - அகங்குளிரக் கண்டு தொழுது அவனருள் பெறுவோமாக.

★★

# அற்புதத் தெய்வம் ஆனந்த மூர்த்தி

- நடராசன் அடிமை

நம் தெய்வீக மதத்தின் உயிர்நாடி நடராசப் பெருமான். அவ்வழகிய மூர்த்தியின் கருணையிலும் தோற்றத்திலும் ஈடுபடாதவரே கிடையாது. அவ்வழகிய காட்சியைக் காண்பதற்காகவே பிறவி வேண்டுமெனப்பாடினார் அப்பர் சுவாமிகள். நடராசப் பெருமானது திருக்கையிலுள்ள டமருகம் என்னும் துடியின் முழக்கத்தால் உலகம் படைக்கப்பட்டு, அமைந்த பொற் கரமென்று அபயமளிக்கும் திருக்கரத்தால் காத்தலும், தியேந்திய திருக்கரத்தால் அழிக்கப்பட்டும் ஊன்றிய திருவடியால் நமது பாவபுண்ணியங்கள் மறைக்கப் பட்டும் தூக்கிய திருவடியால் உலகத்தவர் அருளப் படுகின்றனர் என்பது

**தோற்றம் துடியதனில், தோயும் திதி அமைப்பில்**
**சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் : முத்தி**
**நான்ற மலர்ப் பதத்தே நாடு**

எனக்கூறுகிறது உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூல்.

இத்தகைய நடனம் பிறவி எனும் பிணியைப் போக்கிப் பேரானந்தம் தரும் மருந்து. குழந்தைகளுக்குச் சில நேரத்தில் மிகச் சக்தி வாய்ந்த மருந்துகளை நேராகக் கொடுக்காமல் அவற்றைத்தான் அருந்தித் தன் பால் மூலமாகக் குழந்தைக்கு அன்னை அருத்துவாள் என்பர். அதுபோல அம்மை பராசக்தி இறைவனின் நடனத்தைத் தரிசித்து அந்த இன்பத்தைத் தன் அருளோடு கலந்து உலகிற்கு அளிக்கிறாள். அதன் காரணமாகவே நடராசப் பெருமானின் அருகிலேயே அன்னை சிவகாமியம்மன் எழுந்தருளியுள்ளாள் என்கிறார் குமரகுருபரசுவாமிகள். **இத்தகும் ஐந்தும் நின் மெய்த்தொழிலாகப் பாலுண் குழவி பகங் குடர் பொறாதென்ன நோயுண் மருந்து தாயுண் டாங்கு** எனத்தன் சிதம்பரமும்மணிக்கோவையில் பாடியுள்ளார்.

ஏழுவகை ஸ்வரங்களான ச; ரி, க, ம, ப, த, நி என்பனவற்றின் அடையாளமாக **ஆனந்த நடனம், சந்தியா நடனம், கௌரி தாண்டவம், திரிபுர நடனம், காளி தாண்டவம், முனி தாண்டவம், சங்கார நடனம்** ஆக ஏழுவகை நடனங்களை இறைவன் செய்ததாகக் கூறும் திருப்புத்தூர் புராணம். ஏழுவகை நடனங்களையும் பற்றி ஏழு கட்டுரைகளே எழுதலாம். வல்லவர் மூலம் கேட்டு உணர்க. குமரகுருபரசுவாமிகள் நடராஜப் பெருமானை அம்பலக்கூத்தன், அற்புதக் கூத்தன், வைதிகக்கூத்தன் என்றும், அவர் ஆடும் திருக்கூத்தை அற்புதக்கூத்து, ஆனந்த நடம், தாண்டவம், பரமநாடகம், மாநாடகம் என்றெல்லாம் களித்து நமக்கு இன்பமூட்டுவர்.

தாண்டவம் ஆடற்கலை; இசையிருந்தால் தானே ஆட மடியும்! ச, ரி, க, ம, ப, த, நி என்று ஏழு ஸ்வரங்களுக்குத் தக்க ஏழு வகையான தாண்டவங்களை இறைவன் செய்தார் எனும் திருப்புத்தூர் புராணம். அவைகளின் விவரம் வருமாறு:

சிதம்பரம் பொன்னம்பலத்திலே **ஆனந்த தாண்டவம்,** மதுரை வெள்ளியம்பலத்திலே சந்தியா தாண்டவம், திருப்புத்தூர் சிற்சபையிலே **கௌரி தாண்டவம்,** திருக்குற்றாலம் சித்திரசபையிலே **திரி புரதாண்டவம்,** திருவாலங்காட்டு இரத்தின சபையிலே **காளிதாண்டவம்,** திருநெல்வேலி தாமிர சபையில் **முனிதாண்டவம்,** இருண்ட நள்ளிரவிலே **சங்கார தாண்டவம்** எனக் கூறப்படுகிறது.

இத்தகைய தாண்டவ நிலைகளைக் கண்டு மகிழ்ந்த வடமொழிப் புலவர் ஒருவர் ''பெருமானே! **தங்கமலை**யிலிருந்து தங்க சபைக்குச் சிதம்பரத்தில் வந்தாய். பின்னர் மதுரைக்கு **வெள்ளி** சபைக்கு வந்தாய். அதற்குப்பின் திருநெல்வேலியில் **தாம்பிர** சபைக்கு வந்து குற்றாலத்தில் **சித்திரசபைக்கு**. வந்தனையே! இப்படி இறங்கி வந்த நீ, இந்த ஏழையின் இருதயமான **இரும்பு சபைக்கு** வரலாகாதா? என வினோதமாகக் கேட்கிறார். கைலைமலை என்னும் கல்லில் வசிக்கும் நீ என் நெஞ்சான கல்லுக்கு வரக் கூடாதா என மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

**வலிய கல் நினது மனம் அதன் மாட்டு**
**மருவுறேன் என்று நீ**
**இசைத்தால் - பொலி பருப்பத மந்தரம்**
**அதன் இடத்துப்**
**புணர்ந்தது தகாததாய் முடியும்**

எனத் தம் கலைசைச் சிதம்பரேசுவரர் மாலையிலே கேட்டருளுகிறார்.

சிதம்பரம் நடராசப் பெருமானும் திருவரங்கத்தில் அரங்கநாதப் பெருமானும் தெற்கே நோக்கிக்

கொண்டிருக்கின்றனர். தென்னிலங்கையில் உள்ள வீடணனுக்கு அருள்பாலிக்கத் திருவரங்கப் பெருமான் தெற்கு நோக்கிப் படுத்துக்கொண்டிருப்பதாகக் கூறுவர். சிவபெருமானான நடராஜப் பெருமான் ''என் அடியவர் எவரையாவது தீண்டினால் உன்னை மார்க்கண்டனுக்காகத் திருக்கடவூரில் எட்டி உதைத்த மாதிரி உதைத்து அழித்துவிடுவேன்'' என இயமனது திசையான தென் திசை நோக்கித் திருவடியைத் தூக்கிக்கொண்டு நிற்கிறான் எனக் கூறுகிறார் குமரகுரு பரசுவாமிகள்.

நடராஜப் பெருமான் ஒரு காலைத்தூக்கி மற்றொரு காலை ஊன்றி நிற்பது ஏன் என்பதற்குக் காரணம் கூறுகிறார் குமர குருபர சுவாமிகள். வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) பதஞ்சலி என்ற இருவருக்காகவே இறைவன் சிதம்பரத்தில் தைமாதத்தில் ஒரு வியாழனன்று பூசநட்சத்திரத்தில் ஆடினார் என்பது உலகறிந்த செய்தி. பதஞ்சலி முனிவர் திருமாலின் படுக்கையாக விளங்கும் ஆதிசேடர். தம் திருத்தலையில் உலகத்தைச் சுமப்பவர் என்பது யாவரும் அறிவார். இரண்டு கால்களையும் ஊன்றி நின்றால் தனது அடியவரான ஆதிசேடன் (பதஞ்சலி) தாங்க முடியாது என்பதால் ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கி நின்று நடனம் செய்கிறார் என்கிறார்.

முப்புரமும் அழிய ஒரேபாணம் விட்டு உலகத்தை அதிரச்செய்த பெருமானே! இரண்டுகால்களையும் ஊன்றி நின்றால் தாங்கமுடியாது; எனவே ஒரு கால் ஊன்றி ஆடியருள்க என ஆதிசேடனது அவதாரமான பதஞ்சலி வரங்கேட்டாரோ?

புரமொன்றிரண்டும் புகைஅழல்
உன்ன, புவனமுன்னும்
சரமொன்று அகிலம் சலிக்க
எய்தோய்! சலியாநடஞ்செய்
வரமொன்று: இரண்டுமலர்த்தாளும்
ஊன்றில் தன்மாமகுடம்
பரமொன்றும் என்று கொலோ கொண்டவா
அப்பதஞ்சலியே.

சிதம்பர மும்மணிக்கோவை - 4

இறைவனே! எம்போன்ற அடியார்களுடைய மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியாது மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து பாம்புகளை ஏவி எங்களைச் சோதித்து ஆடவைக்கும் நீர் ஒரே பாம்பான பதஞ்சலிக்காக ஆடுகின்றீரே? என வினோதமாகக் கேட்கிறார்.

ஓட்டுவிக்கக் கூட்டினை விட்டோடும்
பொறியரவுஐந்து
ஆட்டுவிக்கும் சித்தர் நீர் ஆனக்கால் -
கூட்டமிட்டு
மன்றாடும் உம்மை ஒரு மாசுணம் நின்று
ஆட்டுவிக்க
நின்று ஆடுகின்றது என் கொல் நீர்

இத்தகைய அதிசயத்தெய்வமான நடராஜப் பெருமானை வணங்கக்கூடியவர்கள் வேண்டும் வரங்களைப் பற்றி அறிந்தால் நம் உள்ளம் அதிசயமும் ஆச்சரியமும் அடைகிறது.

தில்லை நாயகனான நடராஜப் பெருமானிடம் குமரகுருபரசுவாமிகள் ''பெருமானே! பெருங்குளிரால் நடுங்கும்போது நிறைய தையல்கள் போடப்பட்ட ஒரு கருந்துணி வேண்டும். படுத்துறங்குவதற்கு வாயிற்புறத்துத் திண்ணையொன்று வேண்டும். கடுமையான பசியைத் தணித்துக் கொள்ளுதற்கு உப்பில்லாமல் காய்ச்சப்பட்ட புல்லரிசிக் கூழ் தவிர, வேறு எது கேட்டு நான் வாய்விட்டு அலறினாலும், யாரும் கொடுக்கவே கூடாது. இது தவிர ஒழுக்கமுள்ள உன் அடியாரின் நட்பு வேண்டும். என் உடல் அழியும் வரை மேற்கண்ட எளிய தேவைகளை அடியேனுக்கு அளிப்பதுடன், உன் திரு வடி அடைவது தவிர வேறு ஏதாவது வரங் கேட்டாலும் அளிக்கக்கூடாது'' என எளிய வாழ்க்கையும் உயர் பதவியை அடையும் வழியையும் வரங் கேட்கிறார்!

நடராஜப் பெருமான் திருவபிடேகம் கொள்ளும் மார்கழி திருவாதிரை வரும் இந்நன்னாளில் அப்பெருமானைச் சிந்தித்து வணங்கி அவனருள் பெறுவோமாக.

வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்!
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்!
வாழி அவனை வணங்கு முடி சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்!

- குமரகுருபரசுவாமிகள்

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

திருச்சிற்றம்பலம்.

இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

- அப்பரடிகள்

# கம்பரின் கைவண்ணத்தில் பரதன்

டாக்டர் இரா. செல்வகணபதி, எம்.ஏ., பி.எட்., பி.எச்.டி.,
மயிலாடுதுறை.

உலகில் படைக்கப்பட்ட எல்லாக்காப்பியங்களும் உயரியன என்று கூற இயலாது. கால வெள்ளத்தைக் கடந்து உயிர்வாழ்வன சில, காலவெள்ளத்தில் கரைந்து அழிந்தன பல.

என்றும் மாறா மனித குலப் பண்புகளோடு உறவாடி, அவர்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஈடு கொடுத்துக்காப்பியங்கள் நின்று நிலவ அவற்றிற்கு இரண்டு கூறுகள் இன்றியமையாதன.

ஒன்று மானுடம் தழுவிய கதைக்கரு!
இரண்டாவது படைப்பாளியின் ஆளுமை!

இவ்விரு கூறுகளும் பெற்று நின்று நிலவும் இந்தியப் பெருங்காப்பியங்களுள் தலையாய ஒன்று கம்பனின் இராமகாதை.

கதைக்கரு வான்மீகம் தந்தது.

மானுடப் பண்புகளுக்கு உயிரூட்டி, மண்ணின் மரபுகளோடு அதனைப் பட்டை தீட்டியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

கம்பனை அறிந்த பலரும், அவனை ஒரு கற்பனைக் கவிஞனாகவே கண்டு போற்றினார். இப்போற்றுதல், கவிஞனை முழுமையாக மதிப்பிட்டுரைப்பதாக அமையவில்லை. கற்பனைப் புனைவுகள் மட்டும், ஒரு கவிஞனுக்கு வாழ்வளித்துவிட முடியாது. கம்பனின் வாழ்வுக்கு இதனினும் மேலான ஓர் ஆற்றல் அடிப்படை என்பதனைக் கண்டு தெளிய அரிய ஆற்றல் வேண்டும்.

கம்பனை வாழ்வைக்கும் அவ்வரிய ஆற்றல் எது?
அவனது மானுடப்புனைவுகள்!

'கம்பன்' என்றொரு மானுடன் வாழ்ந்ததும்' என்ற பாரதியின் மதிப்பீடு ஆழமானது.

கம்பன் என்றொரு கவிஞன் என்றோ, புலவன் என்றோ, அறிஞன் என்றோ கூறாது 'மானுடன்' என்று மதிப்பிட்டுரைத்தது நுட்பம் நிறைந்தது.

அவன் மானுடன் என்பது அன்று
பாரதியின் உள்ளம்;
மானுடத்தை மதிப்பிட்டுப் புனைந்த
மானுடன் கம்பன்
என்பது பாரதியின் உள்ளம்.

கம்பனின் மானுடப்புனைவைப் 'பரதன்' என்ற பாத்திரப் படைப்பில் முழுமையாக இனம் காண இயலும்.

மனித வாழ்க்கை சிக்கலானது
'புகழ் எனின் உயிரும் கொடுப்பர் - பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்'
என்பான் சங்கநூற் புலவன்.

இல்வாழ்வின் நிறைவு புகழில் தங்குகிறது. இது வள்ளுவனின் மதிப்பீடு.

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே'
என்பான் புறநானூற்றுப் புலவன். புகழ்பட வாழ முயல்வார் பலர். வாழ்ந்து மக்கள் நெஞ்சில் நிறைவார் சிலர்.

வேறுசிலர்வாழ்வு அவலமானது. புகழ் நோக்கிய அன்னார் பயணம் தொடங்கும் முன்பே, பழி அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அத்தகையோர் வாழ்க்கை முழுவதும் பழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நீண்ட போராட்டக்களமாகவே அமைந்து விடுதல் உண்டு.

அத்தகு பேரவலப் பாத்திரமாகவே கம்பன் பரதனைப் படைத்துக் காட்டுகிறான்.

புகழ்க்குணங்கள் பலவும் நிரம்பியவன் பரதன். ஆனால் அவன் மேல் பழி வந்து படர்ந்து விடுகிறது. அதுவும் பெற்ற தாய் வழி வருவது பேரவலமாகிவிடுகிறது. அயோத்தியிலும், கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் அவனை முற்றிலும் தூயன் என்று உணர்ந்தோர் மிகச்சிலர். பலரும், அவனை ஐயக்கண் கொண்டே நோக்கினர். இராமன் ஒருவனே

அவனை முற்றாக அறிந்தவன். பெற்ற தாய், மகன் விரும்பம் இது என அறியாது குற்றமிழைக்கிறாள். வளர்த்த தாய், அவனை ஐயுற்றுப் பின் தெளிகிறாள். தம்பி இலக்குவன், கொலை வேகம் கொண்டு பகைக் கிறான். அவன் கருத்தில் தடுமாறிக் குகனும் ஐயுற்றுப் பேதலிக்கிறான். தந்தையோ, இவன் என் மகனே அல் லன் என்று பழி சுமத்திச் சாகிறான். இந்தப் பேர வலங்களிலிருந்து கம்பன் பரதனை மீட்கும் அருமை யில் மானுடவியல் கூறுகள் பட்டை தீட்டப்படு கின்றன.

பரதனைப் பொறுத்தவரை கோசலம் அவ னுக்குக் குழப்பம் நிறைந்தே அமைகிறது. அங்கே மக்கள் தெளிவானவர்கள். ஆனால், இராமன் மேல் கொண்ட அளப்பரிய பாசத்தால் மன்னன் தசரதன் குழப்பத்தில் வாழ்கிறான்.

பிள்ளைப் பேறு வாய்க்காதவள், மாற்றான் மகனைத் தன் மகனாக வளர்ப்பது புரிந்து கொள்ளக் கூடிய உலகியல்.

அல்லது, தன் வயிற்றில் பிறந்த மகன் அறிவுக் குறைபாடு உடையவனாக இருந்தால், அவனைப் புறக்கணித்து மாற்றாள் மகனை ஒருத்தி தன் மகனாக வளர்த்தல் தகும்.

அறிவும் ஆற்றலும் நிரம்பி, இராமனுக்கு இணையான குணநலம்மிக்க பரதன் இருக்கும்போது, கைகேயி இராமனைத் தன் மகன் எனப் போற்றி நின்றது, தசரதனின் அரசியல் சதுரங்கத்தில் ஓர் அங்கம் என்பது தெளிவு.

தான் பெற்ற மகன் இராமனைக் கைகேயிடம் வளரவிட்டுப் பரதனைத் தன் மகனாக வளர்க்கும் கோசலையின் நிலையும் ஒரு புரியாத புதிரே!

அரசகுலத்தில் பிறந்த, தன் மிகுந்த அன்புக் குரிய மனைவியிடம், ஆசைக்குரிய தன் அன்பு மகன், இராமன் வளரவேண்டும் என்று தசரதன் போட்ட கணக்கில்தான் பரதன் வாழ்வின் சிக்கலே கருக் கொள்கிறது.

பாத்திரப் புனைவைக் காப்பியம் முற்றும் அறி யாதவர்களுக்கு விளக்குவது ஒருமுறை. காப்பி யத்தைக் கரைகண்டவர்களுக்கு, உன்னதங்களை அடையாளம் காட்டுவது மற்றொரு வகை. இவ்வாய்வு இரண்டாம் வகையினது.

கைகேயி கேட்ட வரங்களால் பரதன் மீது பழி வந்துநிறைகிறது.

**பன்னிருகை வள்ளல் முருகனே**

யானைக்கு ஒருகை
நமக்கு இரு கரங்கள்
இந்திரனுக்கு நான்கு
விநாயகருக்கு ஐந்து
தத்தாத்ரேயருக்கு ஆறு
அக்கினிக்கு ஏழு
பிரம்மனுக்கு எட்டு
சிவபெருமானுக்குப் பத்து
முருகப்பெருமானுக்குப் பன்னிரு திருக்கரங்கள்
பன்னிரு கரங்களால் அள்ளி அள்ளி வழங்கும்
வள்ளல் முருகனே.

பெற்ற தாய்க்குத் தன் விருப்பம் தெரிந்திலது. ஆனால், பல்லாண்டு வளர்த்தெடுத்த தாயைக் கண்டால், தன் துயர் தீரும் என்று நம்புகிறான் பரதன். பழியும் படரும் நிறைந்த கனத்த நெஞ்சுடன் கோசலை தாள்களைப் பணிகிறான்.

> 'இரதம் ஒன்று ஊர்ந்து, பார் இருளை நீக்கும் அவ்
> வரதனில் ஒளிபெற மலர்ந்த தொல்குலம்
> பரதன் என்று ஒரு பழிபடைத்தது -'

என்று பரதன் புலம்பி நிற்கிறான். கோசலை நெஞ்சம் பரதன் குற்றமற்றவன் என்றே அறிகிறது.

> 'நிலம்பொறை ஆற்றலன் நெஞ்சம் தூய்து எனா
> சலம் பிரிது உற மனம் தளர்ந்து கூறுவான்'

எனத்தொடங்கிக் கோசலை கூற்றைக் கம்பன் பதிவு செய்கிறான். அந்தக் கூற்றில் இழையோடும் ஒரு 'தொனி' பரதனைச் சுட்டெரிக்கிறது.

அறிவும் உணர்வும் மனித மனத்தின் உள்ளே, இடையறாது போராடி நிற்கும் இரு கூறுகள். அறிவு, உணர்வைப் புறங்கண்டு மேலெழும்போது, மனிதன் உயர்கிறான். உணர்வு வெல்லும்போது தாழ்கிறான். கோசலை சராசரி விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்ட ஒரு மானுடப்பெண். பரதன் தோற்றமும் துயரும் கண்ட அவள் அறிவு.

> 'மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
> செய்யனே' -

எனத் தேற்றம் கொள்கிறது. ஆனால், அறிவைப் புறம் கண்ட உணர்வு, பெற்ற மகன் மேல் கொண்ட பாசமும்,

மாற்றான் மேல் கொண்ட வெறுப்பும் காரணமாக மேலெழ,

'கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலுமால்' -

எனக் கோசலையை வினவச் செய்து விடுகிறது.

பேரறிவும், சிந்தனைத் தெளிவும் மிக்கவர்கள் கூட, துன்ப மிகுதியால் தன்னிலை இழந்து விடுகின் றனர். தன் இழப்பில் நிலை தடுமாறாத சிலரும், தன் அன்புக்குரியரின் துன்பத்தில் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர். அதிலும், பெற்ற மகனுக்கு ஒரு இழப்பு என்றால், தாய் மனம் பெரும்பேதலிப்பில் தங்குகிறது. ஆண்களை விடப் பெண்கள், இக்களங்களில் அதிக மாகவே நிலை தடுமாறி விடுகின்றனர். தன் கோயி லில், தான் ஈன்ற மகனாகவே கருதிப் பரதனை வளர்த் தவள் கோசலை. அவன் இயல்பும், பண்பும், அவள் அறியாதன அன்று. மேலும், கைகேயி தீமை சூழ்ந்த காலை பரதன், பாட்டன் வீட்டில் இருந்திருக்கிறான். இவையாவும் கோசலை அறியாதன அன்று. முன் குறித்தவாறு அறிவு மனம்.

'மையறு மனத்து ஒரு மாசு உளான் அலன்
செய்யனே' -

என்று தெளிந்தாலும், அதனினும் முற்பட்ட உணர்வு ஐயச் சொற்களை அள்ளித் தெளிக்கிறது. பரதன் துடி துடித்துப் போகிறான்.

கோசலையை அன்றி வேறு எவர் ஐயுற்றிருந்தா லும் பரதன் இந்த அளவு கலங்கி இரான். தன்னை நன்கு அறிந்த தன் வளர்ப்பு அன்னையின் ஐயம், அவனைப் பெரிதும் பாதிக்கிறது. பொதுவாகவே சுடுசொற்களும், கடுமொழிகளும், ஐயக்குறியீடுகளும் மனிதனைப் பாதிப்படைய வைப்பன. அதன் அளவு அது எவ ரிடமிருந்து வருகிறது என்பதைப் பொறுத்தே அமை கிறது. 'கைகேயியாகிய உன் தாயின் செயல்பற்றி பரதனே நீ ஏதும் அறிந்தருக்கவில்லையோ' என்ற சொற்கள் அவனைப் பெரிதும் பாதித்து விடுகின்றன. தன்னைத் தூயனாக நிலைநாட்ட வேண்டிய இன்றி யமையாமை அவனுக்கு உளவாகிறது.

தான், மனத்தாலும் குற்றமற்றவன் என் பதைக் கோசலைக்கு அறிவிக்க, வேறு வழி காண இயலாத பரதன், பலபடச் சூளுரைக்கிறான். கம்பன் காபியத்தில், அறங்களின் பிழிவான பகுதி இது. தமிழ் இலக்கியத்தில் சூளுரை என்பது தொன்று தொட்டு வருவது. என் பகைவர்களை நான் வென்று மேம்படுவேன்: இயலாவிடின், நான் இன்னின்ன கீழ்மைகளைச் செய்தவனாவேன் எனச் சூளுரை செய்தலைப் புற இலக்கியங்கள் பேசிக்காட்டுகின்றன. சூளுரை மொழிகளின் பின்புலத்தில், தமிழர் பெரிதும் உயர்வாகப் போற்றிய, அறநெறிகள் அணிவகுத்து நிற்கும். பரதன் சூளுரையும் அங்ஙனமே அமைகிறது.

வேதங்களையும், வடமொழி நீதி நூல்களை யும் தமிழ்த் தொன்னூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த கவிஞன் கம்பன். உயர் அறங்களைக் காப்பியத்தில் பதிவு செய்ய, இடம் தேடி நின்ற கம்பனுக்குப் பரத னின் சூளுரை, தன் எண்ணங்களைப் பதிவு செய்ய நல்ல களமாக அமைகிறது. உயர்நெறிகளைச் சான் றோர் வாய்ச் சொல்லாகப் பதிவு செய்தல், ஒரு உள வியல் உத்தியாகும். அவ்வாறு செய்வதால் அவற்றின் மதிப்பு இரட்டிப்பாகிறது.

'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'

என்ற வள்ளுவம் அரண் அமைக்கிறது. கதைப்போக் கில், பரதன் தன்னைத் தூயன் என நிலைநாட்டக் கூறும், இச்சூளுரைப் பகுதி, அறங்களின் அணி வகுப் பாகக் காப்பிய வாழ்வுக்கு அரண் சேர்க்கிறது. கவிஞ னின் அறநெஞ்சமும் இனங்காணப்படுகிறது.

பரதன் சூளுரையாகக் கம்பன், பத்தொன்பது விருத்தங்களைப் பதிவு செய்கிறான். அவற்றில், ஒரு மனிதன் செய்யத் தகாத, கொடுஞ்செயல்கள் எவை எவை என இனங் காட்டப்படுகின்றன. நான், உண் மையில் கைகேயி இழைத்த கொடுமையை அறிந்த வனாயின், அறம் பிழைத்த அன்னோர் எய்தும் அரு நரகிடை வீழ்ந்தவனாவேன் என்று நீள்கின்றன பரத னின் சூளுரை மொழிகள். அவற்றை முழுவதுமாக எடுத்து மொழிந்து, ஆய்வுக்கு உட்படுத்தினால், அவை ஒரு தனிநூலாக விரியும் நீட்சி உடையன. இடம் கருதிச் சிலவற்றைக் காணல்தகும். இத்தகு அரிய பதிவுகளில், பாத்திரப் பண்புகள் பளிச்சிடுவதோடு, கவிஞனின் அறநெஞ்சின் அழகும் வெளிப்படுகின்றது.

தீ எரி நரகத்தில், சென்று வீழ்வார் யார்? எவ் வகை அறக்கேடுகள், அன்னாரைத் தீயுழி உய்க்கும், என்பதை அறிவிக்கும் அரியபகுதி இது.

அறநெறி சாராது, அதனைப் புறக்கணித்துப் பொருள் ஈட்டுபவன்.

கருணை சிறிதும் இல்லாத கொடுநெஞ்சம் உடையவன்.

மாற்றான் மனைவி மீது ஆசைகொண்டு, பிறன் ஒருவனுக்கு உரியாளின் மனையை மிதித்தவன்.

கடும் கோபத்தால், பிறர் மீது சீற்றம் கொள்பவன்.

## இறவாமல் இருக்க என்ன வழி

இறவாமல் இருக்க வேண்டும் என்றால் பிறவாமல் இருக்க வேண்டும்.

வினை முழுதும் நீங்கி விட்டால் பிறவி இல்லை.

இறை பக்தி செய்து வழிபாடுகள் செய்ய வினை முழுதும் தீரும்.

"திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே"

- திருஞானசம்பந்தர்

வலிமை காரணமாக, நிலைபெற்ற பிற உயிர்களைக் கொன்று உண்டு வாழ்பவன்.

துறவு நெறி நிற்கும் பெருந்தவத்தோர்க்கு, அரிய துயரத்தை விளைத்தவன்.

பெற்றோரையும், பெண்டிரையும் வாளால் கொன்றவன்.

போரில் புறமுதுகிடும் நிலைவந்தபோது, உயிர்விடாது நாடு மீண்டவன்.

இரவலன் சேமித்து வைத்திருந்த நிதியைத் துன்புறுத்தித் தனதாக்கிக் கொண்டவன்.

திருமால், உலகின் தலைவன் அல்லன் என்று பேசித் திரிபவன்.

அறநெறி, வகுத்த அந்தணர்தம் வழி முறைகளில் பிறழ்ந்தவன்.

குற்றமற்ற வேதத்தைப் போற்றாது, இது, திட்டமிட்டபொய் என்று கூறும், பேய் நெஞ்சு படைத்தவன்.

தாய் பசித்திருக்கத் தன வயிற்றை நிரப்பிக் கொள்ளும் பாவி

தன் தலைவன் வீழுமாறு செய்து வாழ்ந்தவன்.

மேற்குறித்த அறக்கேடு சூழ்ந்தவர்கள் எய்தும் நரகிடை, நான் சென்று சேர்வேன் என்கிறான் பரதன்.

எத்தனை வகை அறக்கேடுகள், உலகில் உள்ளன என்பதை, இனங்காட்டும் கம்பன், பரதன் வாயிலாக நம்மை மீட்கும் அரு முயற்சியில் ஈடுபடுகிறான். கதை நிகழ்வு கடந்த இத்தகைய அறிவூட்டல்களில், கவிஞன், மனிதநேயம் மிக்க, ஒரு மாமனிதனாக உயர்கிறான்.

பரதனின் சூளுரை மேலும் நீள்கிறது.

அச்சூளுரைகளின் சாரமாகச் சிலவற்றை இனம் காண்பது பாத்திர உயர்வை அறிய உதவுவதோடு, அறக்கூறுபாடுகளை நாம் அறியவும் உதவுகின்றது.

பொய்க்கரி கூறுதல்; அடைக்கலப் பொருளைத் தனதாக்கி வௌவுதல்; மகனைக் கொல்லுதல்; கன்று பசித்துச் சாகப் பால் கறத்தல்; நன்றியை மறத்தல்; நடுவழியில் உயிர் பெரிதென்று மகளிரைக் கைவிட்டு ஓடுதல்; அயலாதார் பசித்திருக்க உண்ணுதல் ஆகியவற்றைக் குற்றங்களாகப் பதிவு செய்யும் கம்பன், அரசியல் வஞ்சகர்களையும் இனம் காட்டுகிறான்.

'அழிவு அரும் அரசியல் எய்தி ஆகும் என்று
இழி வரு சிறுதொழில் இயற்றி ஆண்டு தன்
வழி வரு தருமத்தை மறந்து, மற்று ஒரு
பழி வரு நெறிபடர் பதகன் ஆக யான்.'

அரசியல் ஆதாயம் கருதி, இழிவரு சிறுதொழில் இயற்றும், கீழோரையும் அடையாளம் காட்டிக் கவிஞன் எச்சரிக்கை விடுக்கிறான்.

கன்னிப்பெண் ஒருத்தியை வஞ்சித்து அடைய விரும்புவன்; ஆசிரியன் மனைவியைக் காமக்கண் கொண்டு பார்த்தவன்; கள் உண்டவன்; திருடன்; உண்ணலாகாதவற்றை நாய் போல் உண்டு நின்றவன்; பிறர் பழி கூறுவோன்; வேண்டிய ஒருவனுக்கு, உண்டு இல்லை என்று கூறாது அலைக் கழிப்பவன். பகைவர் தம் நாடழிக்கவும், எதிர்த்துப் பொறாது அஞ்சி உயிர் வாழ்பவன் முதலியோர் கீழ்மையர் என்கிறது பரதன் நெஞ்சம். இந்த நீண்ட வஞ்சினமொழிகள் கோசலையின் ஐயத்தை அகற்றி, அவனைத் தூயன் என நிலைநாட்ட உதவுகின்றன.

நல்லறங்கள் பலவற்றையும் அறிந்து, அவற்றைப் பெரிதெனப் போற்றும், இப்பண்புடைய பரதன், குற்றமற்றவன் என்று உணர்ந்தாள் கோசலை.

(தொடரும்)

# கம்பனும் திருமுறைகளும்

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

**பத்தாம் திருமுறை - திருமந்திரம்**

திருமூலநாயனார் அருளிச் செய்துள்ள ''திரு மந்திரம்'' அழகிய வேதாந்த சித்தாந்த நூல் மட்டு மல்ல. மனிதன் வாழ்வைப்பண்புடன் நடத்துவதற் கான பல நீதிகளையும் கூறுகிறார் திருமூலர் அவ ருடைய பலகருத்துக்கள்கம்பருடன் ஒத்து வருகின்றன.

உலகத்தவரின் நன்மையை எண்ணி இறை வனை வணங்கி வாழ்பவரை பார்ப்பான் என்றார். மனிதனின் ஐம்புலன்களை ஐந்து பசுக்கள் என்றார். பசுக்களை அடக்கி மேய்ப்பது போல் ஐம்புலன்களை அடக்கினால் ஐம்புலன்களும் ஞானமான பாலைச் சொரியும் என்றார் திருமூலர்.

**பார்ப்பான் அகத்தில் பால்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத்திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே.**

விசுவாமித்திரர் வசிட்டருக்கு நிகராக வேண் டும் என்ற ஆவலில் தவந்தொடங்கினார். திலோத்த மையை தேவர்கள் அனுப்பித் தவத்தைக் கெடுத்தனர். பின்னர் திரிசங்கு என்ற அரசனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற முயற்சியிலே, ஒரு தனி உலகத்தையே திரிசங்கு உலகத்தைப் படைத்தார். அவரே ''தவஞ்செய் யும் ஞானிகள் கண்டு அஞ்சும் ஆசை, கோபம் ஆகி யவைகளின் உருவான அரக்கர்'' **(தவஞ்செய்வோர்கள் வெருவறச் சென்றடை காமவெகுளி என நிருதர்)** எனக் குறித்தார். இத்தகைய தடங்கல்களினின்றும் நீங்கி பிரம்மரிஷிப் பட்டம் பெற்ற பின் **ஐவரை அகத் திடை அடைத்த முனி** எனக்குறித்தார் கம்பர்.

★★★

இறைவன் எல்லாமாயிருப்பவன். நிலம், ஆகா யம், அக்கினி, சந்திரன், மேகம் யாவும் அவனே என் கிறார் திருமூலர்

**தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்**
**தானும் கடும் அங்கி ஞாயிறுதிங்களும்**
**தானே மழை பொழிதையலுமாய் நிற்கும்**
**தானே தடவரை தண்கடல் ஆமே.**

சுக்ரீவன் இராமபிரானின் பெருமையை அறிந்து **''வையம் நீ வானும் நீ மற்றும் நீமலரின் மேல் - ஐயன் நீ, ஆழி நீ, ஆழி வாழ் அமலன் நீ -** செய்திவினை தெறும் தேவுநீ என்றும், இராமபிரானின் பெருமையை அறிந்த வாலி **''மூவர் நீ முதல்வன் நீ மற்றும் நீ, முற்றும் நீ, பாவம் நீ தருமம் நீ பகையும் நீ''** என்றான். இராமபிரான் வருணனை வழிவேண்டி வராததால் அக்கினிக்கணை தொடுத்தார். **''ஆழி நீ அனலும் நீயே அல்லவை எல்லாம் நீயே ஊழி நீ உலகும் நீயே அவற்றுறை உயிரும் நீயே''** என்றும் **''அன்னை நீ அத்தன்நீயே அல்லவை எல்லாம் நீயே பின்னும் நீ முன்னும் நீயே பேறும் நீ இகழ்வும் நீயே''** என்ற வரிகள் திருமூலரின் வாக்குகளைத் தழுவிய மாதிரியே அமைந்துள்ளன.

★★★

''இளமை நிலைக்காது என்ற கருத்தை காலை யில் இளஞ்சூரியனாகத் தோன்றியவன் மாலையில் மறைகிறான். கன்றாகப் பிறந்து இளமையில் எருது என அழைக்கப்பட்டுப் பின்னர் இறந்து போகிறது'' என

**கிழக்கெழுந்தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டும் தேறார் விழியிலாமாந்தர்**
**குழக்கன்று மூத்து எருதாய்ச்சிலநாளில்**
**விழக்கண்டும் தேறார் வியன் உலகோரே**

தசரத சக்கரவர்த்தி தன் மந்திரிகளிடம் ''மூப்புவந்த பின்னும் தருமநெறிப்படி துறவுமேற் கொள்ள வேண்டாமா?'' எனக் கேட்கிறார். **(அறந் தலைநிறைந்த மூப்படைந்த பின்னரும் துறந்திலன்)**

இராமபிரானை ''இந்த அரசை ஏற்றுக் கொள்'' எனக் கூறவந்த போது மிகவும் தளர்ந்து விட்டேன். தாங்கற்கரியதும் பெரியதுமான மூப்பு என் உடலில் தோன்றி விட்டது. **(ஐய! சாலவும் அலசின அரும் பெரும் மூப்பு)** என்றார். அது மட்டுமல்ல, திருமூலர் கூறிய எருதின் உவமை கூட இங்கு வருகிறது.

ஒருபக்கம் சுமக்கமுடியாத பாரமும், நொண் டிக் காலும் உள்ள வண்டியிழுக்கும் பொதிமாடு படும் பாட்டைப் போல் அரசாட்சி சுமையாலும், வயோதி கத்தாலும் நான் அரசாட்சியை விட விரும்புகிறேன் என்கிறார்.

ஒருத்தலைப் பரத்து ஒருத்தலைப்பங்குவின் ஊர்தி
எருத்தின் ஈங்கு நின்று இயல்வரக் குழைந்து
இடர் உழக்கும்
வருத்தம் நீங்கி அவ்வரம்பறு திருவினை மருவும்
அருந்தி உண்டு எனக்கு ஐய ஈது அருளிட வேண்டும்

அரசை விட்டு எல்லையில்லா முத்திச் செல்வத்தை அடையும் ஆசையுடையேன். அதனை நீ நிறைவேற்ற வேண்டும் என்றார்.

கள்ளுண்ணும் அன்பருக்கு மயக்கம் ஏற்படும்; கவலையை உண்டாக்கும்; உண்மையெனும் வாய்மையை அழித்துவிடும். தவறான பெண்ணாசையை உண்டாக்கும்; ஞானமடைய முடியாது. இறைவனின் அருளான இன்பம் அவர்களுக்குக் கிட்டாது என்கிறார் திருமூலர்.

மயங்கும் தியங்கும் கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்
தியங்கம் இடையறா ஆனந்தம் எய்துமோ.

வாலியைக் கொன்று இராமபிரான் சுக்கிரீவனுக்கு அரசளித்தார். சுக்கிரீவன் கள்ளுண்டு மயங்கி இராமபிரானுக்குத் தான் செய்யும் கடமையை மறந்தான். **(கள்ளினால் அதிகம் களித்தான்)** என்பது கம்பன் வாக்கு.

கள்ளுண்டு இராமனுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை மறந்துவிட்டேன் நறவுண்டு மறந்தேன் எனச் சுக்கிரீவன் உண்மையை உணர்ந்து வேதனையுற்று இராமபிரானைக் காணவே வெட்கமாயுள்ளது காண நாணுவேன் என்றான்.

கள் குடிப்பதால் வஞ்சனை, திருட்டு, பொய் பேசுதல், அறியாமை, முறையற்ற கொள்கையும், அடைந்தவரைக் காக்கத் தவறுவதும், செருக்கு முதலானவை வந்துவருத்தும் திருமகளின் கருணை குறையும். இவ்வளவு கொடுமையான கள் நஞ்சைக் காட்டிலும் கொடியது. நஞ்சு மனிதரைக் கொல்லும். கள் மனிதரைக் கொல்வதுடன் அல்ல. நரகத்தையளிக்கும்.

வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில்
கொட்டும்
தஞ்சமென்றாரைத் நீக்கும் தன்மையும்
களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும் கண்ணினால்
அருந்தினாரை
நஞ்சமும் கொல்லும் ஆனால்
நரகினை நல்காதன்றே.

நல்ல இலைகள் இருக்க, ஒட்டகங்கள் வேப்பிலைகளை மேய்வது கண்ட கம்பன் பால் முதலானவையிருக்க கள்ளையுண்ணும் மனிதன் மாதிரி என கள்ளின் கீழான தன்மையைப் பாலகாண்டத்தில் கூறுவர் கம்பர்.

மனிதர் உட்கொள்ளும் உணவு, நீர் முதலானவைகளின் நல்ல சத்துக்கள் உடலில் சேர்த்துக்கொண்டு அவைகளின் உபயோகமற்ற சக்கைகள் மலம் வியர்வை சிறுநீர்களாக வெளிப்படுகின்றன. அது நன்மை. இது இயற்கை.

கள் மனிதனின் உடலில் புகுந்ததும் அறிவை வெளியில் தள்ளுகின்றது. இலங்கையில் கள்ளருந்திய கூட்டத்தில் ஒரு பெண் அறிவை இழந்து ''இதோ என் மீது தெய்வம் வந்துவிட்டது'' என ஆடி, பெருமூச்சு விட்டு, இரண்டு கைகளையும் தலைக்கு அருகில் தூக்கி, பெருமூச்சுவிட்டு நடுங்கி ஒடுங்கினர் என்கிறார் கம்பர்.

தயிர்நிறத்து உருகள் உள்ளம் தள்ளுற அறிவுதள்ளி
பயிர்வுறத் தெய்வம் என்மேல் வந்தது
பார்மின் என்னா
உயிர் உயிர்த்து, இரண்டுகையும் உச்சிமேல்
உயர நீட்டி
மயிர்சிலிர்த்து உடலம் கூசி வாய்விரித்து
ஒடுங்குவாரும்.

மனிதனுக்கு நான் என்ற அகந்தை ஏற்பட்டால் அவனது ஆற்றல் குறையும். அறிவு அழியும். இறைவனின் நினைவை அழிக்கும். ஆணவம் என்ற, அகந்தை நீங்கினால் அறிவொளி கிடைக்கும் என்றார்.

மலக்கலப்பாலே மறைந்தது சக்தி
மலக்கலப்பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப்பாலே மறைந்தது தானு
மலக்கலப்பற்றான் மதியொளியாமே

இராவணன் அழிந்தது காமத்தால் மட்டுமல்ல. பிறன் மனைவியை விரும்பியதுமல்லாமல் தனக்கு யாவரும் அடங்கியவர், தான் ஒருவன் தான் பலசாலி என்றெல்லாம் எண்ணிவிட்டான். ''எட்டுத்திக்கில் உள்ள யானைகள் என்னைக் கண்டு ஓடும். தேவர்கள் நிலை கலங்குவர். தேவருலகத்தைச் சுட்டெரித்தேன். உலகத்தின் ஏகசக்கராதிபதியான என்னை தசரதன் மக்கள் வெல்ல முடியுமா? என மாரீசன் கூறிய நற்புத்தியை மறுத்து இராவணன் பேசினான்.

திக்கயம் ஒளிப்ப, நிலை தேவர்கெட, வானம்
புக்கு அவர் இருக்கை புகைவித்து, உலகம்யாவும்

சக்கரம் நடத்தும் எனையோ தயரதன் தன்
மக்கள் நலிகிற்பர்? இது நன்று வலியன்றோ.

சீதாபிராட்டியிடம் தன் பலத்தைப்பற்றி "மேருவைப்பறித்தெடுக்கவோ ஆகாயத்தையே இடிக்கவோ, கடல்களைக் கலக்கவோ, வடவமுகாக்கினி போன்றவற்றை அழிக்கவோ, உலகத்தையே பெயர்க்கவோ, விரும்பினாலும் என்னால் முடியும். இந்த இராவணனை என்னென்று நினைத்தாய்?'' என ஆணவத்துடன் பேசினான்.

மேருவைப் பறிக்க வேண்டின், விண்ணினை
இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின் நெருப்பினை
அவிக்க வேண்டின்
பாரினைப்பிளக்க வேண்டின் பலவினை
சிலசொல் ஏழாய்
யாரெனக்கருதிச் சொன்னாய் இராவணற்கு
அரிதோ? என்றான்

சீதாபிராட்டியை இராவணன் எடுத்துச் சென்ற போது, "நீ வீரனாகில் ஏன் மறைந்து வந்து எடுத்துச் செல்ல வேண்டும்?'' என்பதற்கு "வலிமையற்ற மனிதருடன் போர்புரிவது, சிவபெருமானது கைலையை எடுத்து விளையாடிய என் வலிமைக்கு இழிவாகும். அதைக்காட்டிலும் வஞ்சனை மேலாகும்!'' என்று ஆணவமாகப் பதிலிறுத்தான்.

மொழிதரும் அளவில் நங்கை! கேள்இது!
முரணில்யாக்கை
இழிதருமனிதரோடே யான் செருஏற்பன் என்றால்
விழிதருநெற்றியான்தன் வெள்ளி
வெற்பெடுத்ததோட்குப்
பழிதரும் அதனின் சாலப்பயன் தரும் வஞ்சம்''
என்றான்.

எதிரிகளை என்றும் குறைத்து மதிப்பிடக் கூடாது. இராமலட்சுமணர்களை மானுடப்பசுக்கள் என ஆணவத்துடன் அலட்சியமாகக் குறித்தான்.

வீடணன் நற்புத்தி கூறிய போது "ஊனமான வில்லை ஒடித்து, ஓட்டை மரத்தில் அம்பு செலுத்தி, வீட்டுவேலைக்காரியின் சூழ்ச்சியால் அரசை இழந்து, யான் செய்த சூழ்ச்சியால் மனைவியை இழந்து உயிர் வாழும் மனிதனின் வலிமையை உன்னைத் தவிர யார் மதிப்பார்?'' என ஆணவத்துடன் இகழ்ந்து பேசினான் இராவணன்.

ஊனவில்லிறுத்து ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டி
கூனிசூழ்ச்சியால் அரசிழந்து உயர்வனங்குறுகி

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்

"ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்''
- திருமூலர்

பல்பெருஞ் சமயம்சொல்லும்
பொருளும் போல்
பரந்தது அன்றே
- கம்பர்

யாளிழைத்திட இல்லிழந்து இன்னுயிர் சுமக்கும்
மானுடன் வலி நீ அலாது யார் உளர் மதிப்பார்?

போர்க்களத்தில் இராமபிரானை "சிவனே! பிரமனே! திருமாலே'' என்றெல்லாம் எண்ணிய இராவணன் திடீரென ஆண்வம் மேலிடயாரானலும் சரி என்வீரத்தைக் காட்டியே தீருவேன்: "யாரேனுந் தானாகுக. யான் என் தனியாண்மை பேரேன்'' என ஆணவமாகக் கூறி உயிரிழந்தால் ஆணவமலர் நம்மை அழித்து விடும் என்ற திருமூல நாயனாரின் சொல் எவ்வளவு உண்மையானது எனக்காட்டவே இவ்வளவு விரித்துக்காட்டினோம் ஆணவத்தை விட்டு ஆண்டவனின் அருள் பெற முயல்வோமாக'.

★★★

மேலும் விரிக்கில் பெருகும் எனவே திருமூலரின் கருத்தும் கம்பனின் கருத்தும் என்பது பற்றி இத்துடன் முடிக்கிறோம்.

### சிவநாமத்தின் பெருமை

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்னச் சிவகதிதானே.

### இராமநாமத்தின் பெருமை

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம என்றிரண்டெழுத்தினால்.

திருச்சிற்றம்பலம்

# திருவண்டப் பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்

- மு.பெ. சத்தியவேல் முருகன், B.E.

(முன் தொடர்ச்சி)

வானில் எல்லாப் பொருட்களும் கலந்து நிற்க ஆதாரமானவன் இறைவன்; காற்றில் அது எவ்விடத்தும் திரிந்து சலிக்க ஊக்கமாய் இருப்பவன் இறைவன்; தீயில் சுட்டு ஒன்றுவிக்கும் வெப்பத்தைத் தந்து நிற்பவன் இறைவன்; நீரில் சுவையாய் இருப்பவன் இறைவன்; மண்ணில் அதன் தாங்கும் சக்தியான திண்மையை அளிப்பவன் இறைவன். இப்படி உலகப் பொருள்களில் எல்லாம் இயைந்து நிற்பவன் இறைவன் என்று இறைவனது உலகிற்குட்பட்ட நிலையை எடுத்து மொழிகிறார் மணிவாசகர்:

தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப் பல கோடி எனைப் பல பிறவும்
அனைத் தனைத்து அவ்வயின் அடைத்தோன்

இதில் வானிற்குப் பொய்தீர் வான் என அடை கொடுத்து ஓதி ஒரு விஞ்ஞான உண்மையை விளக்கியது போலவே, நீருக்கு நிழல்திகழ் என்று அடை கொடுத்து ஒரு விஞ்ஞான உண்மையை விளக்கும் திறம் வியப்புக்குரியது.

நிழல் என்றால் அது பிரதிபிம்பம் என்று பொருள். நாம் கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்கிறோம். அந்த உருவம் நமது பிரதிபிம்பம். இந்தப் பிரதி பிம்பத்தை (Image) நிழல் என்று தமிழில் கூறுவர். பிரதிபிம்பமாகிய நிழலைக் காட்டுவதால் கண்ணாடிக்கு நிழல்கலன் என்று பெயர் உண்டு. இன்னும் கூட நமது பிரதி பிம்பத்தைக் காட்டும் படத்தை நிழற்படம் என்று கூறுவது இதற்கு வழக்காற்றுச் சான்றாகும்.

நீரில் ஒரு பிரதிபிம்பம் ஏற்படும். அதாவது ஒரு நிழல் ஏற்படும். நிழல் நிஜமல்ல. அது பொய்த் தோற்றம். நீரில் ஏற்படும் பொய்த்தோற்றத்தை ஒளியியல் கூறுகிறது. ஒரு நீர்த் தொட்டியில் ஒரு பிரம்பை பாதி அமிழ்த்தினால் அந்தப் பிரம்பில் நீரில் மூழ்கியிருக்கிற பகுதி ஒடிந்து திரும்பியது போலத் தோன்றும். இதற்கு ஒளிமுறிவு (Refraction) என்று பெயர்.

இத்தகைய ஒளி முறிவினால் பிரம்பே வளைந்தது போல ஒரு நிழல் தோன்றுகிறதல்லவா? இது எதனால் ஏற்பட்டது? தண்ணீரின் ஒளி இயலினால் ஏற்பட்டது. இதனை மணிவாசகர் எடுத்துக் கூறி நிழல் திகழ் நீர் என்று ஒளிமுறிவு என்ற விஞ்ஞான உண்மையை விளக்கினார் என்னும் போது அவரது அறிவை வியவாமல் இருக்க இயலாது.

வள்ளலார் திருவண்டப் பகுதியையே சிந்தித்து சிந்தித்து அதன் மயமானவர் என்று கட்டுரையின் முதலில் கூறினோம். அதன் விரிவாகவே அவர் அருட்பெருஞ்சோதி அகவலை எழுதினார். திருவண்டப் பகுதியில் கூறுகின்ற ஒவ்வொன்றையும் ஒன்பது மடங்காக அதற்கும் மேலாக அருட்பெருஞ்சோதி அகவலில் விரித்துரைப்பதை இரண்டையும் ஊன்றிப் பார்ப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இத் திருவண்டப் பகுதியில் மண், நீர், தீ, காற்று, வெளி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் அதன் தன்மைகளை அடைத்தவன் இறைவன் என்று மணிவாசகர் கூறியதை விரித்து அருட்பெருஞ்சோதி அகவலில் மண்ணிற்கு 13 கண்ணிகள், நீரிற்கு 14 கண்ணிகள், நெருப்பிற்கு 15 கண்ணிகள், காற்றிற்கு 16 கண்ணிகள், ஆகாயத்திற்கு 19 கண்ணிகள் என விரித்துரைக்கிறார் வள்ளலார்.

அதில் நீரைப் பற்றிக் கூறுகையில் நிழல் திகழ் நீர் என மணிவாசகர் கூறியதன் உட்பொருளான ஒளி முறிவு நிகழ்ச்சியை உள்ளடக்கி,

''நீரிடை ஒளி இயல் நிகழ்பல குண இயல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் சோதி''

என்று வள்ளலார் பாடுவது அவர் மணிவாசகரை எவ்வளவு தூரம் அடியொற்றிப் பாடுகிறார் என்பதற்கும், நீரில் நடக்கும் ஒளி முறிவு நிகழ்ச்சியை மணிவாசகர் எடுத்துக் கூறவே 'நிழல் திகழ் நீர்' என்று பாடினார்

என்பதற்கும் சான்றாகத் திகழ்கிறது என்பதை உன்னிப் பார்க்க வியப்பு பன்மடங்காகிறது.

மேலே சூரியன், திங்கள், ஐந்து பூதங்கள் ஆகியன அவ்வந் நிலையில் இருப்பதற்கு இறைவனே காரணம் என்று இறைவனது உலகிற்குட்பட்ட நிலையைக் கூறினார் என்னும் போது வேறு ஒரு உண்மையும் புலப்படுகிறது.

சைவம் இறைவனது அட்ட மூர்த்தங்களாகக் கூறுவன மேலே கூறப்பட்ட ஏழும் அதன் உடனாக இயமானன் என்ற ஒன்றும் சேர்ந்த எட்டையும் ஆகும். இயமானனை மணிவாசகர் விட்டு விட்டாரா என்றால் இல்லை. இயமானன் என்பது உடலைத் தாங்கி இயக்கும் உயிராகிய புருடதத்துவத்தை. இதனை உள்ளடக்கி 'எனைப் பல கோடி எனைப்பல பிறவும் அனைத் தனைத்து அவ்வயின் அடைத்தோன்' என்ற வரிகளைப் பாடுகிறார் மணிவாசகர். எனவே அட்ட மூர்த்தங்களாக இறைவன் அவ்வவற்றில் அவ்வவற்றின் தன்மைகளை அடைத்து இயைந்து நிற்கும் நிலை கூறப்பட்டது.

அடுத்து ஒரு விஞ்ஞான உண்மையை மற்றுமொரு வரியில் வைக்கிறார் மணிவாசகர். அது 'அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க' என்பது.

இவ்வுலகில் எல்லாவற்றிற்கும் மூலமாய் இருப்பது அணுவே என்று கூறுபவர்கள் சமணர்கள். இதனால் இவர்கட்கு அணுகாரண வாதிகள் என்றும் ஆரம்ப வாதிகள் என்றும் பெயர் உண்டு. அணுவை முடிந்த முடிபாகக் கொண்டவர்கள் சமணர். ஆனால் அதற்கும் மேலே சிந்தித்தவர்கள் சைவசித்தாந்திகள். சித்தாந்திகள் அணு முடிந்த முடிபல்ல, அணுவிற்கும் சிறிதானவனும் நுட்பமானவனும் இறைவனே ஆவன் என்றனர்.

அணுவிற்கும் நுட்பமானது ஒன்று உண்டு என்பது இன்றைய விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது. முதலில் அணுவைப் பிரிக்கவே முடியாது என்றனர் விஞ்ஞானிகள். பின்னர் ருதர்ஃபோர்டு என்ற விஞ்ஞானி அணுவைப் பிளக்க முடியும் என்று கண்டறிந்தார். அப்படிப் பிளக்கும்போது அளவிறந்த ஆற்றல் வெளிப்படுகிறது என்றும் உலகிற்கு உணர்த்தினார். அதன் விளைவே இன்றைய அணுமின் நிலையங்கள் மற்றும் அணு ஆயுதங்கள்.

அணுவைப் பிளந்தால் என்னென்ன கிடைக்கும்? விஞ்ஞானம் பதில் சொல்கிறது.

அணுவின் கருவில் புரோட்டான், பாஸிட்ரான், நியூட்ரான் என்ற துகள்கள் (Particle) உள்ளன. கருவைச் சுற்றி பல்வேறு வட்டப் பாதைகளில் எலக்ட்ரான் என்ற துகள்கள் சுற்றிவருகின்றன. இந்த எலக்ட்ரான்கள் நெகடிவ் சார்ஜ் உடையவை. இவை நியதியாகச் சுற்றுவது கருவைச் சுற்றி உள்ள சக்தி ஈர்ப்பினால் ஆகும். பல்வேறு சக்தி அளவினால் பல்வேறு சுற்றுப் பாதைகள் அமைகின்றன. இவ்வாறு விஞ்ஞானம் கூறுகிறது.

இதனை உள்ளடக்கி மணிவாசகர்,

''கல்லாடத்து கலந்தினிதருளி
நல்லா ளோடும் நயப்புற எய்தியும்''

என்று பாடினார். இங்கே கல்லாடம் என்பது கல் போன்ற சிறு துகள்களான எலக்ட்ரான், புரோட்டான், பாஸிட்ரான், நியூட்ரான் என்பனவற்றை. இவற்றை இழுத்துப் பிடித்து நிற்பது சக்தியாதலால் அவளை நல்லாள் என்று கூறி கல்லாடமும், நல்லாளுமாக அணுவில் நயப்புற அமைந்த தன்மையைக் கூறினார். இவ்வரிகள் கீர்த்தித் திருவகலலில் கூறப்பட்டது. இதனை உள்ளடக்கியே இங்கு திருவண்டப் பகுதியில் 'அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க' என்றார்.

ஐ என்றால் நுண்மை. அணுவல்ல; அணுவைத் தரும் தன்மையில் அணுவை விட நுண்ணியன் இறைவன் என்று கூறிய அழகு போற்றற்குரியது. அணு என்

## திருவாசகத்தின் சிறப்பு

''திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்து நீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர்''

- சிவப்பிரகாசர்

## மணிவாசகர் பெருமை

உருவண்டப் பெருமறை என்று
உலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதி எனும்
திருஅகவல் வாய் மலர்ந்த
குரு என்று எப்பெருந்தவரும்
கூறுகின்ற கோவே நீ
இரு என்று அத்தனி அகவல்
எண்ணம் எனக்கு இயம்புதியே..

- வள்ளலார்

பது முடிந்த முடிபல்ல, அணு என்பது ஒரு கூட்டமைப்பு (Assembly) என்பதை அணுத் தரும் தன்மை என்பதால் குறித்தார். அணுவில் உள்ள துகள்களை முன்னமே கீர்த்தித் திரு அகவலில் கல்லாடம் என்றும் அவை நிற்கும் நிலை சக்தியால் ஆனது என்பதை நல்லாளோடு நயப்புற எய்தல் என்று தாம் கூறியவற்றைத் தழுவியே அணுத்தரும் தன்மை என்று இங்குக் கூறினார்.

இதனை மேலும் உன்னிப்பார்த்து உய்த்துணர்தல் என்ற உத்தியால் அலசினோம் ஆனால் மேலும் சில உண்மைகள் வெளியாகும்.

அணுவில் பாஸிட்ரான் என்பது எடை எதுவும் இல்லாது பாஸிடிவ் சார்ஜ் மட்டும் உடையது. இதனைச் **சில தத்துவம்** எனலாம். எலக்ட்ரான் என்பது எடை உடைய நெகடிவ் சார்ஜ் மட்டும் உடையது. இதனைக் கருவைச் சுற்றி இழுத்துச் சுழற்றும் சக்தி சத்தித்தத்துவம். அணுவில் எலக்ட்ரான் எத்தனை உள்ளதோ அத்தனை புரோட்டான் இருக்கும் என்பது விஞ்ஞானம். ஒன்றற்கொன்று ஏறத்தாழ சமமாய் உள்ள இவ்விரண்டையும் இயைத்திட அது **சதாசிவ தத்துவம் அல்லது சாதாச்சிய தத்துவம்** எனலாம். உள்ளே கருவில் நிலைசெய்யும் நியூட்ரான் **சுத்த வித்தைத் தத்துவம்**. வெளியே சுற்றுக்களில் (Orbit) பாதை நழுவிய நிலையில் சுற்றும் எலக்ட்ரான்கள் (Valent electrons) கிரியை மிகுத்து நிற்கும் **ஈசுர தத்துவம்** எனலாம். இவற்றிற்கும் நுண்ணியவன் இறைவன்.

இதைத் தான் அணுத்தரும் தன்மையில் ஐயோன் என்று மணிவாசகர் மிக அழகுபடக் கூறினார்.

இங்ஙனம் எத்தனை எத்தனையோ விஞ்ஞான உண்மைகளை உள்ளடக்கியது திருவண்டப்பகுதி என்னும் திருஅகவலாகும். மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளிய இத்திரு அகவலில் இன்னும் தோண்டத் தோண்டப் பலப்பல விஞ்ஞான உண்மைகள் பளிச்சிடும். பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்ற நியாயத்தின் வழி ஒரு சில விஞ்ஞான உண்மைகளை மட்டும் அடியேனது அற்ப அறிவிற்கு எட்டிய வண்ணம் காட்டியுள்ளேன். இன்னுன் பலவுள; அவற்றை அறிஞர்கள் ஆன மட்டும் முயன்று உணர்வார்களாக!

அருளாளர்களின் கவிகள் மாதுளங்கனி போன்றவை; பிரித்தெடுக்க, பிரித்தெடுக்க பல மணிகள் கிடைப்பது போல தோண்டத் தோண்ட கருத்து மணிகள் உதிரும்.

ஞானசம்பந்தர் பாடிய 'வாழ்க அந்தணர்' என்ற பதிகத்திற்கு இருபத்திரண்டு பாடல்களால் உரைசெய்கிறார் சேக்கிழார். இறுதியில் அப்பதிகத்திற்கு உரை எழுதினேன் என்று கூறாமல் அப்பதிகத்தைக் கும்பிட்டேன் என்பார். அவ்வாறே இங்கே அடியேன் திருவண்டப்பகுதியைச் சிறிது கும்பிட்டிருக்கிறேன் அவ்வளவு தான்!

திருவண்டப் பகுதியை நீங்களும் கும்பிடுங்கள்!

ஓம் சிவ ஓம்!
அருட் பெருஞ்சோதி!

★★★

# கந்தர் கலிவெண்பாவில் "வேண்டுகோள்"

கலைமாமணி அ. அருளரசு மாசிலாமணி

குமரகுருபரர் கந்தர் கலி வெண்பாவின் நிறைவாக மானிட வாழ்வுக்குத் தேவையான சில விண்ணப்பங்களை நம்முடைய பிரதிநிதியாக இருந்து முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். எம்பெருமானே! எனக்கு வாழ்வில் எந்த விதமான தடைகளும் வரக் கூடாது. உலகத்தில் எத்தனையோ வகையான துன்பங்கள் உண்டு. அந்தத் துன்பங்கள் என்னை அணுகக் கூடாது. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். உன்னைப் புகழ்ந்து பாடுவதற்கு எனக்கு நல்ல தமிழ்ப் புலமை வேண்டும். உன் அடியார்கள் கூட்டத்தோடு வாழ் வதற்கு அருள் புரிய வேண்டும். உன்னுடைய திருவடியை நினைத்து வாழ்வதற்கு உன் பாதகமலங் களைக் காட்டி எனக்குக் கருணை புரிய வேண்டும்.

நோயுடைய மனிதனுக்கு நோய் தீர மருந்து தர வேண்டும். நோய் நீங்கியவுடன் உடல் வலிமை பெறுவதற்குச் சத்தான உணவு கொடுக்க வேண்டும். மருந்தினால் நோய் தீரும். நல்ல சுவையான உணவினால் நம்முடைய தேகம் வலிமை பெறும். நோயாளிக்கு மருந்தும் வேண்டும். சத்தான உணவும் வேண்டும்.

பிறவி நோயால் அல்லல் படக்கூடிய நமக்கு வைத்தியனாக இருப்பவன் வள்ளி மனவாளன். அவனை மனமகிழ்ந்து அவனுடைய ஆறுபடைவீடு களையும் கண்டு அவனுடைய மந்திரமாகிய ஆறு எழுத்தையும் உள்ளன்போடு ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதுகின்றவருடைய இதயத்தாமரையில் குடி கொண்டு இருப்பவன் முருகன்.

**உள்ளம் உவந்து ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும்**
**அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே!**

ஆறு படை வீடுகளையும் கண்டு வணங்குவதை அடியார்கள் விரும்புவார்கள். அவன் ஆறெழுத்து மந்திரத்தை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து இன்புறுவார்கள். அத்தகைய அடியவர்களுடைய இதயத்தையே கோயிலாகக் கொண்டு முருகன் குடி கொள்வான். அவன் வாக்கு மனத்திற்கு அப்பாற் பட்டவன். பொறி புலன்களுக்கு அப்பாற்பட்டவன். வேதவேதாந்த நாத நாதாந்தமெல்லாம் காண முடியாம லிருப்பவன்; அவன் உயிர் கூட்டங்கள் அருள் பெற வேண்டுவதற்கு அழகிய வடிவம் கொண்டு அவதரித் தான். அவன் திருவுருவத்தைக் கண்ணாலே கண்டு நெஞ்சில் நிறுத்தித் தியானம் செய்ய வேண்டும். முருகன் மும்மலத்தார்க்குக் குருநாதனாகவும், இருமலத்தார்க் குத் தன் உருவைக் காட்டியும், ஒருமலத்தார்க்கு ஜோதி சொரூபனாகவும் ஆட்கொள்கிறான். ஆற படை வீடு கொண்டிருக்கக் கூடிய முருகன் அடியார்களுடைய இதயமாகிய ஏழாவது படை வீட்டிலும் எழுந்தருள விரும்புகிறான்.

## ஆறெழுத்து மந்திரம்

முருகனுக்குரியது ஆறு எழுத்து மந்திரம் - இந்த மந்திரத்தை யார் நினைக்கிறார்களோ அவர் துன்பத்தை நீக்கும் சக்தி வாய்ந்தது. ''மந்'' என்றால் நினைப்பது ''திரம்'' என்றால் நீக்குவது, அல்லது காப்பதும் ஆகும். ஆயிரம் கோடி முறை ஜெபித்தும் துன்பம் நீங்க வில்லை என்று சிலர் வருந்துகிறார்கள். அவன் திரு நாமத்தை உச்சரிக்கும்போது ஊன் உருக, உயிர் உருக கண்ணீர் மல்க இதயத்தில் அன்பு பொங்க மந்திரத்தை உருபோட வேண்டும். இதைத்தான் மாணிக்கவாசகப் பெருந்தகையார்

**''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து**
**உன்விரை ஆர்கழற்கு என்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து உன்னைப்**
**போற்றி சயசய போற்றி என்னும்**
**கைதான் நெகழவிடேன் உடை**
**யாய் என்னைக் கண்டு கொள்ளே''**

என்று பாடினார்.

எல்லோருடைய இதயத்திலும் குகன் இருக்கி றான். எல்லா இடங்களிலும் நிறைந்து உள்ள அப்பெரு மான் அடியார்களுடைய உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டு விளங்குகிறான்.

**நினைப்பவர் மனம் கோவிலாகக் கொண்ட வன் என்று அப்பர் பெருமான் கூறுகின்றார்.**

அதையே குமரகுருபரர் **உள்ளம் உவந்து ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறு மவர் சிந்தை குடிகொண்டோனே!** என்று கூறி யுள்ளார்.

இதையே திருமுருகாற்றுப்படையில்

ஆறெழுத்து அடக்கிய அருமறைக்கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப்பாடி

என்று நக்கீரர் கூறுகிறார்.

பழங்காலம் முதற்கொண்டு ஆறு எழுத்து மந்திரத்தை சொல்லும் வழக்கம் இருந்து வருகிறது. அதுதான் ''சரவணபவ'' என்பது ஆகும்.

## திருச்செந்தூர்

திருச்சீரலைவாய் என்றும், செந்தி என்றும், செந்தில் என்றும், ஜெயந்திபுரம் என்றும், செந்தூர் என்றும் இத்தலத்திற்குப் பெயர்கள் உண்டு. கடல் அலைகள் செந்தில் ஆண்டவன் திருவடியை நோக்கி வந்து வணங்குவதால் திருச்சீரலைவாய் என்ற பெயர் உருவாயிற்று.

வரைவயிறு கிழித்த நிழல் திகல்வேல் நெடுவேல்
திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்

என்று பழம்பாடல் கூறுகிறது.

திருமணிவிளக்கின் அலைவாய் செருமிகுசேய்

என அக நானூறும்,

வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேல் நிலைஇய காமர் வியன்துறை

எனப் புறநானூறும்

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்
குன்றும் ஏரகமும்நீங்கா இறைவன்

என்று சிலப்பதிகாரமும்,

நம் செந்தில் மேயவள்ளி மணாளர்க்கு
தாதை கண்டாய் மறைக்காடுறையும்
மணாளன் தானே!

எனத் திருநாவுக்கரசரும் பாடிச் சிறப்பித்து உள்ளார்கள். முருகப் பெருமான் சூரனை வெற்றி கொண்டதால் இதற்கு ஜெயந்தி என்ற பெயரும் ஏற்பட்டது. அத்தகைய செந்தூர் ஆண்டவன் திருவருளால் பேசும் சக்தி பெற்ற குமரகுருபரர் கந்தர் கலி வெண்பாவின் இறுதியில் செந்தில் ஆண்டவனை வேண்டுகிறார்.

நாறுமலர் தந்திப் பொதும்பர் எழுகார்
அலைக்கும் சீரலைவாய் செந்திப்பதி புரக்கும்
செவ்வேளே!

முருகப் பெருமானுக்குச் செவ்வேள் என்று பெயர். காமனுக்கு கருவேள் என்று பெயர்.

## விண்ணப்பம்

செந்தில் ஆண்டவனைப் புகழ்ந்து பாட அவன் பேசும் சக்தி கொடுத்தான் என்று அச் செந்தில் ஆண்டவனைப் புகழ்ந்து பாடி வேண்டுகிறார். இறைவா! எனக்கு வருகிற துன்பங்கள் எல்லாம் நீங்க வேண்டும். எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாக இருப்பது சன்மம் என்ற பகைதான். இதை வள்ளுவரும்

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை

என்பர்.

பிறப்பு, இறப்பு என்பது ஒன்றொடொன்று இணைந்தது. ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் தலை, மறுபக்கம் பூ என்பது போல பிறப்பு ஒருபக்கம் என்றால் இறப்பு மறு பக்கம் பிறப்பு என்றதுன்பம் இல்லாவிட்டால் இறப்பு என்ற துன்பமும் இல்லை.

பிறந்தோர் உறுவது பெருகியதுன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்.

ஆகவே இறைவனை வேண்டுங்கால் பிறவியே வேண்டாம் என்று வேண்டிக் கொள்ள வேண்டும். நமக்குப் பெரும்பகையாக வருவது ஜென்மம் தான். அதை முதலில் வைத்து குமரகுருபரர் வேண்டுகிறார்.

சந்ததமும் பல்கோடி சன்மப் பகையும்
அவமிருத்தும் பல்கோடி விக்கனமும்

என்றார். அருணகிரிநாதர்

எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனது இடர் பிறவி அவதாரம்

என்று திருப்புகழில் பாடியுள்ளார்.

முருகா உன் திருவருள் கிடைக்காவிட்டால் இனி பல்கோடி ஜென்மம் வந்து கொண்டே இருக்கும். அது எனக்குத் தாங்க முடியாத பெருந்துன்பம். அந்த ஜென்மமாகிய பகை எனக்கு நீங்க வேண்டும் என்று விண் ணப்பிக்கிறார். அவன் அருளால் இனி பிறக்காமல் இருக்கலாம். இப்போது பிறந்து விட்டோமே! இந்த உடம்பு இவ்வுலகத்தில் இருக்கும் வரை வாழத்தான் வேண்டும். வாழ்விலே பல நோய்கள்வரும்; பல துன்பங்கள் வரும். அவை எல்லாம் என்னை நெருங்காது காப்பாற்ற வேண்டும். உனக்குத் தொண்டு செய்து கொண்டே வாழ்வது இன்பத்தை தரும். ஆகவே எனக்குக் குறை ஆயுளைக் கொடுத்துவிடாதே! நீண்ட ஆயுளைக் கொடு. நான் உன்னை வாழ்த்திக் கொண்டே வாழ வேண்டும் என்கிறார் குமரகுருபரர். இதனையே அப்பர் ''மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''! என்றார் உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேன்' என்கிறார்திருமூலர். நாம் இந்த உடம்புக்கே

இன்பத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அருளாளர்கள் உடம்பைக் கருவியாகக் கொண்டு உயிருக்கு உய்வு தேடினார்கள். உயிர் பேரின்பம் பெறுவதற்காக உடம்புக்கே எந்த நோயும் வரக்கூடாது என்று எண்ணினார்கள். குமரகுருபரர் நமக்காக ஆண்டவனை வேண்டுகிறார். முருகா! எனக்கு குறை ஆயுளைக் கொடுக்காதே! நீண்ட ஆயுளைக் கொடு. நீண்ட ஆயுளைக் கொடுத்துக் நோய்களைக் கொடுத்து விடாதே! நோயுள்ள உடம்பைக் கொடுத்தால் உன்னுடைய தொண்டினை நான் எவ்வாறு செய்ய முடியும்! ஆகவே எண்ணிறந்த துன்பங்களையும், பலவகையான நோய்களையும் எனக்குக் கொடுக்காதே! முருகா! என்று வேண்டுகிறார்.

> அவமிருத்தும் பல்கோடி விக்கினமும் பல்பிணியும்
> பல்கோடி பாதகமும் செய்வினையும் பாம்பும்
> பசாசும், அடர் பூதமும், தீ, நீரும், பொருபடையும்,
> தீதகலா வெவ்விடமும், துட்ட மிருகம் முதலாம்
> இவையும் எவ்விடம் வந்து என்னை எதிர்த்தாலும்

குமரகுருபரர் எந்த எந்த வகையினால் நமக்குத் துன்பங்கள் வருகின்றதோ அவைகள் அனைத்தையும் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். பாதகமாவது நாம் நம்பி யிருப்பவரே நமக்குத் துன்பம் செய்வதாகும். நாம் செய்யக்கூடிய காரியங்களுக்குப் பிறரால் தடை ஏற்படலாம். கருவி கரணங்களால் தடை ஏற்படும். நம்முடைய அறியாமையினால் காரியங்களில் வெற்றி பெற முடியாது. இந்தத் தடைகளை நீக்க இறைவன் அருள் வேண்டும். உடம்பில் பிணிவராது பாதுகாப்பது அவசியம். நோயற்ற வாழ்விலே வாழ வேண்டும் என்பார் வள்ளலார். ஏராளமான கொடுமையான நோய்கள் மனித சமுதாயத்தை ஆட்கொள்கிறாது. மருத்துவர்கள் ஆய்வு செய்தும் தீர்க்க முடியாத நோய்கள் பல உண்டு. இந்த நோய்களை எல்லாம் தீர்க்கக்கூடிய வைத்திய னாக முருகப்பெருமான் இருக்கிறான். தீராத நோய்களை எல்லாம் தீர்த்தருள இருக்கிறான். இதையே அப்பர் பெருமான்

> பேராயிரம்பரவி வானோர் ஏத்தும் பெம்மானை
> பிரிவில்லா அடியார்க்கு என்றும் வாராத செல்வம்
> வருவிப்பானை மந்திரமும், தந்திரமும் மருந்துமாகி
> தீரா நோய்த் தீர்த்தருள வல்லான்தன்னை.

என்று பாடியதை நாம் சிந்திக்க வேண்டும்.

செய்வினை என்பது வெறுப்பாலே பிறர் துன்படைய வைக்கக்கூடிய சூன்யம். கந்தர் சஷ்டி கவசம். சண்முக கவசம் ஆகியன இன்னின்ன நோய்கள் வந்தால் இவ்விவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று முருகப்பெருமானை வேண்டிப் பாடப்பட்டன. அதே போல குமர குருபரர் கந்தர் கலிவெண்பாவை கவசமாக அமைத்திருக்கிறார். செய்வினைகள் எம்மை வந்து தீண்டக் கூடாது. பாம்பினால் உண்டாகும் நஞ்சு தீண்டக் கூடாது. பேய், பிசாசு, பூதம், ஆகியோருடைய துன்பம் என்னை அண்டக்கூடாது. தீயினாலோ, நீரினாலோ, ஆயுதங்களாலோ எனக்குத் துன்பம் ஏற்படக் கூடாது.

தற்காலத்தில் நடக்கக்கூடிய விபத்துக்கள், கலவரங்கள், வெடி குண்டு, விஷவாயு, கொடுமையான நச்சுப் பொருட்கள் இவைகளால் துன்பம் வரும் என்று அன்றேகருதி காலத்தினால் வரும் துன்பங்கள் வாராமல் காத்தருள வேண்டும் என்று வேண்டுகிறார். அதை இன்றைய சமுதாயத்தில் என்னை என்று அழைக்காமல் எம்மை என்பது ஆராயத் தக்கது. இதையே சேக்கிழார் பெரிய புராணத்தில் திரு நீலகண்ட நாயனார் வரலாற்றில் நீலகண்ட நாயனார் மனைவி ''எம்மை தீண்டுவிராயின் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டார்; ''எம்மை'' என்ற காரணத்தினாலே மற்ற மாதரை சிந்தையாலும் நினையேன் என்று உறுதி பூண்டார். அதைப்போல குமர

## முருகப் பெருமானின் துணைவரான நவ வீரர்கள்

1. வீரவாகு
2. வீர கேசரி
3. வீர மகேந்திரன்
4. வீர மகேச்சுரன்
5. வீர புரந்தரன்
6. வீரராக்கதன்
7. வீர மார்த்தாண்டன்
8. வீராந்தகன்
9. வீரதீரன்

குருபரர் எம்மை என்ற காரணத்தினால் நம் அனை வருக்கும் பிரதிநிதியாக இருந்து எல்லோரையும் காப்பதற்கு முருகா! நீ வரவேண்டும் என்கிறார்.

**முருகனின் காட்சி**

முருகப் பெருமானின் காட்சியைக் கொண்டு வந்து மனக்கண் முன் நிறுத்துகிறார்.

எவ்விடம் எம்மை வந்து எதிர்த்தாலும்
அவ்விடத்தில்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத்
திருவரையும் சீரடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்
சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற வந்து

என்று பாடியுள்ளார்

இறைவனிடத்தில் பக்தி மேலிட்டு அவன் திரு வுருவத்தைக் கண்ணால் கண்டு மனதிலே தியானம் செய்தால் நாம் எந்த இடத்தை நோக்கினாலும் அங்கே வந்து காட்சி கொடுப்பான். இதை அருணகிரிநாதர்

செங்கேழ் எடுத்த சினவடிவேலும் திருமுகமும்
பங்கே நிறைத்த நற்பன்னிரு தோளும் பதுமமலர்
கொங்கே தரளம் சொரியும் செங்கோடைகுமரன்
என
எங்கே நினைக்கினும் அங்கே வந்து என் முன்
எதிர்நிற்பனே!

என்கிறார்.

இதையே குமரகுருபரர் தம் அனுபவபூர்வ மாக முருகன் அடியார்களுக்கு எத்தகைய தீங்கு வந்தாலும், அங்கே நீ பச்சை மயில் வாகனத்தோடு பன்னிரண்டு தோள்களோடு பயமகற்றும் கூர் வேலைக் கையில் ஏந்திக் காட்சி கொடுக்க வேண்டும். அப்போது கச்சை அணிந்த இடை அழகிய திருப்பாதங்களோடு சிவந்த பன்னிரண்டு கரங்களோடு கருணை பொழியும் பன்னிரு கண்களோடு நாங்கள் ஆறுதல் பெறுதற்குரிய ஆறு திரு முகங்களோடு ஒளிபொருந்திய இரத்தின கிரீடங்கள் தாங்கி நாங்கள் எங்கிருந்து நினைத்தாலும் அங்கு வந்து எங்களுக்குக் காட்சி கொடுத்து எங்கள் துன்பங்களை எல்லாம் தூள் தூளாக்க வேண்டும். இவ்வாறு அழகிய திருக்கரங்களோடு காட்சி கொடுத்து எங்களைக் காத்தருள வேண்டும் என்று வேண்டி யுள்ளார்.

''இடுக்கண் எல்லாம் பொடிப்படுத்தி எவ்வரமும்
தந்து புகுந்து உல்லாசமாக
உள்ளத்திருந்து''

தூயமனத்தோடு இறைவனை நாம் கூப்பிட் டால் அவன் உள்ளத்துவந்து அமர்வான்.

## நவகிரகங்களுக்கு உகந்த திருத்தலங்கள்

1. சூரியன் - சூரியனார் கோயில்
2. சந்திரன் - திருப்பதி, திங்களூர்
3. செவ்வாய் - பழநி, வைத்தீசுவரன் கோயில்
4. புதன் - மதுரை, திருவேற்காடு
5. வியாழன் - திருச்செந்தூர், சுவாமி மலை
6. சுக்கிரன் - திருவரங்கம்
7. சனி - திருநன்னாறு
8. இராகு - திருக்காளத்தி
9. கேது - திருக்கேதீச்சரம்

இப்படி அமர்ந்தால் மட்டும் போதுமா? நீ என் இதயத்தில் குடிபுகுந்தபோது நான் உன்னை நெஞ்சார, வாயார புகழ்ந்து பாட வேண்டும். நீ தமிழ்க் கடவுள். முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் நீ நான் உன்னை தமிழினாலே பாடினால் உன்உள்ளம் மகி ழும். தமிழிலே பாடுவதற்குப் பழுத்த தமிழ்ப் புலமை வேண்டும். பழுத்த என்றால் முதலில் பூவாகி, பிஞ் சாகி, காயாகி, முதிர்ந்து கனியாகிறது. கனி தான் சுவை மிக்கது. அதேப் போல எனக்குப் பழுத்த தமிழ்ப் புலமை தர வேண்டும். உன்னை நான் கவி பாட வேண்டும். ஆசுகவி, மதுர கவி, வித்தார கவி, சித்திர கவி என நான்கு வகையான கவிகள் உண்டு. ஒரு வர் கொடுத்த பொருளைப்பற்றி உடனே பாடுவது ஆசுகவி, மதுரகவி, பாரதியார், வள்ளலார் போன்ற வர்கள் இவ்வாறு பாடி இருக்கிறார்கள். வித்தார கவி என்பது கம்பராமாயணம் போன்ற விரிந்த காவியங் களைப் பாடுவது, சித்திரகவி என்பது சித்திரத்தில் பாடுவது, இதையே குமரகுருபரர்

நாற்கவியும் பாடும் பணியிற் பணித்தருளாய்

என்று கலைமகளை வேண்டுகிறார்.

**கலைமகளும், குமரகுருபரரும்**

ஆசுமுதல் நாற்கவியும், அட்டாவதானமும்,
சீர் பேசும், இயல் காப்பியத் தொகையும்,
ஓசை எழுத்து
முதலாம், ஐந்து இலக்கணமும் தோய்ந்து பழுத்த
தமிழ்ப்புலமை பாலித்து ஒழுக்கமுடன்

என்று பாடியுள்ளார் குமரகுருபரர்

அட்டாவதானம் என்பது ஒரே சமயத்தில் எட்டு கேள்விகளுக்கு விடையளிப்பது. அத்தகைய அட்டாவதானசக்தி எனக்குத்தரவேண்டும் அது மட்டும் போதாது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்கின்ற ஐந்து இலக்கணமும் அமைய நான் பாட வேண்டும். நோயற்ற உடம்பைக் கொடுத்து விடுகிறான். நல்ல பழுத்த கல்வி ஞானத்தைக் கொடுத்து விடுகிறான். ஆனால் மனிதனுக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம். எவ்வளவு படித்துப் பட்டங்கள் பெற்றிருந்தாலும் ஒழுக்கம் இல்லா மனிதன் மனிதனாக இருக்க மாட்டான். தலையில்லாத மனிதனைப் போல. ஆகவே ஒழுக்கமும் வேண்டும் என்று வேண்டுகின்றார். இந்த பிறவியில் இரு துன்பங்கள் உண்டு. இருவாதனை என்பார்கள். ஒன்று அகப்பற்று, மற்றொன்று புறப்பற்று, அகப்பற்றை அகங்காரம் என்பர். புறப்பற்றை மமகாரம் என்பர். இந்த இரண்டையும் அழிக்க வேண்டும் என்பர். யான், எனது அற்ற இடமே, இறைவன் குடியிருக்கும் இடம்.

நான் என்கிற அகங்காரம் உடையவனிடம் இறைவன் வரமாட்டான். ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலங்களை அடியோடு நீக்கினால் அங்கே ஆண்டவன் வருவான்.

இம்மை பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைபெருமலங்கள் மோசித்து
தம்மை விடுத்து ஆயும்பழைய அடியார்களுடன் கூட்டி

என்று பாடியுள்ளார் குமரகுருபரர்.

நல்ல குணங்கள் உண்டாக நல்லோர் இணக்கம் தேவை. அந்த நல்லோர் இணக்கம் மெய் ஞானத்தை தரும். அத்தகைய அடியார்கள் கூட்டத்தோடு எப்போதும் இருப்பது நன்மையாகும். தம்மை விடுத்து ஆயும் பழ அடியார்கள் கூட்டத்திலே கலந்து நான் நன்றாக செம்மைப்பட வேண்டும். எல்லா வகையான இன்பங்களை விட இறைவனிடம் சேர்வது பரமானந்தம் என்பர். அதை நான் பெறுமாறு செய்ய வேண்டும்.

தோயும் பரபோகம் துய்ப்பித்து சேய கடியேற்கும்
பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு அடியோர்க்கு
முன்னின்று அருள்.

நல்ல நறுமணம் வீசும் தாமரை திருவடியைக் காட்டிப் பேரின்பத்தை அருளவேண்டும். பேரின்பம் என்பது ஆண்டவனுடை திருவடிகள்தான். ஆண்டவனே! மீண்டும் இந்த உடம்பை எடுக்காத வண்ணம் சிவந்த திருவடியைக் காட்டிப் பேரானந்த பேரருளைத் தந்தருள வேண்டும் என்று கந்தர் கலி வெண்பாவில் தம் வேண்டுகோள்களைத் தெரிவித்துப் பாடியுள்ளார் நம் குமரகுருபர சுவாமிகள்.

★★★

## அட்டமா சித்திகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அணிமா | : | அணுவினும் சிறிய அணுவாக நுணுகி விளங்கக்கூடிய தன்மை |
| 2. | மகிமா | : | மேருமலையைப் போல உயர்ந்த பெரிய வடிவாகும் தன்மை |
| 3. | இலகிமா | : | மேருமலை போன்று விளங்கினாலும் எடுத்தற்கு எளிதாக விளங்கும் தன்மை |
| 4. | கரிமா | : | அணுவைப் போல் சிறிய நிலையில் இருப்பினும், மேருவைப் போல் எடுத்தற்கரிது ஆதல் |
| 5. | பிராப்தி | : | நினைத்த அளவில் எவ்வுலகும் சென்று எல்லா இடங்களிலும் உலவி வரும் தன்மை |
| 6. | பிராகாமியம் | : | கூடுவிட்டுக் கூடு பாய்தல். விரும்பிய போகம் நுகர்தல், முக்கால நிகழ்வும் உணர்தல் |
| 7. | ஈசத்துவம் | : | இறைவனைப்போல படைக்கவும், காக்கவும், அழிக்கவும் செய்தல் |
| 8. | வசித்துவம் | : | தேவர் மூவர் யாவரையும் தம் ஏவலுக்கு அடங்குமாறு வசப்படுத்தல். |

# பொது நடம்

- பேராசிரியர் க. ஆறுமுகம், மதுரை

### *அழகாட்டம்*

உயர்ந்த மலை. அதன்மேல் ஓங்கி வளர்ந்த மரங்கள். அம்மரங்கள் செறிந்த சோலையில் இயங்கும் சூரர மகளிர். கண்ணைக் கவரும் அவர்தம் பேரழகு. அடிமுதல் முடிவரை அழகின் ஆட்சி. கிண்கிணி ஒலிக்கும் சீறடி. மூங்கில் போன்ற பெருந்தோள். வளைந்து துவளும் சிற்றிடை. இடையில் மின்னும் செந்நிறப் பூம்பட்டு. அப்பட்டாடைக்கு மேல் காசுகள் ஒலிக்கும் மேகலை. மேகலை மட்டுமா? இன்னும் பலப்பல பொன்னணிகள். தோழியர் புனைந்த கூந்தல். வேட்சியும் குவளையும் விரவி மணக்கும் உச்சிக்கொண்டை. அக்கொண்டையில் செருகும் சண்பகம். அதன்மேல் கட்டிய மருதப் பூங்கொத்து, அதைச்சுற்றிக் கட்டிய செவ்வரும்பு மாலை. தெய்வ உத்தியும் வலம்புரியும் திகழ திலகம் போலியும் திருநுதல். அத்திருநுதலில் தொங்கும் மகரவாய். வளமான செவிகளில் பளபளக்கும் அசோகின் ஒளிமிகு தளிர். காதுகளில் செருகிய அத்தளிர், மார்புகளில் பட்டுஅசையும் காட்சி. சந்தனம் பூசி, அதன்மேல் வேங்கைப் பூக்களின் மகரந்தத்தை அப்பிய கொங்கைகள். அரமகளிரின் இயற்கை அழகே போதும். அதற்கு மேல் அழகுக்கு அழது செய்வது போன்ற இத்தனை செயற்கை அழகுகள். இயற்கைக் கவினும் செயற்கை வனப்பும் இரண்டறக் கலந்து தாண்டவமாடும் எழில் மிகுதியை என்னென்பது! இவ்வெழில் மகளிர் விளவின் இளந்தளிரை ஏந்தி ஒருவர்மேல் ஒருவர் ஆடம்பர அலங்கார அழகாட்டத் திற்கு இடையிலும் அவ்வரமகளிர் முருகன் திரு வருளை நினைந்து உருகிப்பாடுகின்றனர். ''முருகனது கோழிக்கொடி நெடிது வாழ்க'' என்று வாழ்த்திப் பாடி யாடுகின்றனர்.

> கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
> வாழிய பேரிதென் றேத்திப் பலருடன்
> சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
> சூரர மகளிர் ஆடும்சோலை. முருகு.38-41.

என்பது நக்கீரரின் திருமுருகாற்றுப்படை. அழகே உருக்கொண்ட அரமகளிராகிய அந்நங்கை நல்லார் முருகன்பால் கொண்ட பேரன்பினை நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றப் பகுதியில் எடுத்துக்காட்டும் திருக்காட்சி இதுவாகும்.

### பேயாட்டம்

அழகாட்டத்தின்பின் வருவது பேயாட்டம். இங்குப் பூஞ்சோலை இல்லை, அகன்ற போர்க்களந் தான் உண்டு. மலர் மரங்கள் இல்லை, பிணக்குவியலே எங்கும். அரமகளிர் இல்லை, பிணங்களின் இடையே திரியும் பேய்மகளிர்தாம். கண்கவரும் அழகுவடிவம் இல்லை. கண்டார் அஞ்சும் விகார வடிவமே. அப் பேய்களின் தலையில் காய்ந்துவறண்ட மயிர். மலைக் குகை போன்ற பெரிய வாயில், ஒன்றோடொன்று மாறுபட்டு ஒன்பான் கோள்போல் வெவ்வேறு திக்கு நோக்கி நீண்டு பிறழ்ந்துநிற்கும் வரிசையற்ற கோரப் பற்கள். பசிய கண்களில் சுழலும் விழிகள். அவ்விழி களில் கண்டாரை அச்சுறுத்தும் கடும்பார்வை. கூகையும் பாம்பும் தோடுகள் போல் தொங்கும் நீண்ட செவிகள். மழமழப்பின்றிப் பனைமரத்தின் மேற்பகுதி போன்று சுரசுரப்பாக இருக்கும் பெரிய வயிறு. கண் டார் நடுங்கும் கொடுநடை. இயற்கை அவலமே போதும். அதற்குமேல், அவலத்திற்கு அவலம் செய் வது போன்ற செயற்கை அவலமும் இரண்டறக் கலந்து வெறிக்கூத்தாடும் இளிவரல். இவ் இளிவரல் நிறைந்த எழிலற்ற பேய்மகளிர் குருதி படிந்த விரல்களின் கூரிய நகத்தால் பிணத்தலைகளின் கண்களைத் தோண்டித் திருவமுது செய்கின்றன (தின்னுகின்றன). விழி இழந்து குழிப்பட்ட அத்தலைகளைப் பந்துபோல் கையிலேந்தி ஆடும் பேயாட்டமும் கண்கொள்ளாக் காட்சிதான். காண்போர் கண்கள் ஏற்றுக்கொள்ளாத அவலக்காட்சி இது. இப்பேயாட்டத்திற்கு இடையி லும் செவ்வேளின் திருவருளைச் சிந்தை செய்து, அவனது வெற்றிக்களத்தை வாழ்த்திப்பாடி ஆடும் அப்பேய்மகளிரின் பேரன்பு வியத்தற்கு உரியதன்றோ!

> ''வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
> நிணந்தின் வாயள் துணங்கை தூங்க'' முருகு 55-6.

என்பது திருமுருகாற்றுப்படை. அருவருப்பே வடிவ மான பொல்லாத பேய்மகளிரும் முருகன் திருமுன் அன்புசெய்து அருள்பெறும் இவ்வரிய காட்சியையும் திருப்பரங்குன்றில் நாம் காண்கிறோம்.

### அழகும் அவலமும் ஆண்டவன் திருமுன்:

அழகும் அழகின்மையும் ஆண்டவன் திருமுன் ஒன்றுபடுகின்றன. சோலை எங்கே, போர்க்களம்

## பரம்பொருள் ஒன்றே

பல மூர்த்திகள் இருப்பினும், பரம்பொருள் ஒன்றுதான். நெருப்பு சிவபெருமான்; நெருப்பில் உள்ள சூடு அம்பிகை. நெருப்பில் உள்ள செம்மை நிறம் விநாயகர், நெருப்பில் உள்ள ஒளி முருகவேள்.

''சுடரே சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை - படரொளியோ
கந்தவே ளாகும் கருதுங்கா சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு''

எங்கே! மணம்வீசும் மலர் மரங்களும், புலரல்நாறும் பிணக்குவியலும் இறைவன் திருமுன் வேற்றுமை ஒழிகின்றன. அழகு வடிவாகிய அரமகளிரும், அவல வடிவுபெற்ற பேய்மகளிரும் அவன்முன் ஒன்றுபடு கின்றனர். மணமலர் ஏந்தியாடும் அரமகளிர் திருக் கூத்தும், பிணத்தலை ஏந்தியாடும் பேய்மகளிர் வெறிக் கூத்தும் அவனுக்கு ஒன்றே. அழகுமிக்க நல்லா ராயினும், அருவருப்பு நிறைந்த பொல்லாராயினும் அந்நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்று அருள்புரி கிறான் முருகன். நக்கீரர் திருப்பரங்குன்றில் நமக்குக் காட்டுவது இறைவனது அருட்பொதுமையை விளக் கும் தெய்வத்திருக் காட்சியே ஆகும். அன்பே வடிவாகிய காரைக்கால் அம்மையார் பேய்வடிவு தாங்கி இறைவனை வழிபடுகின்றார். அப்பேய்மக ளிரை அம்மையே என அழைத்து அருள்புரிகிறான் இறைவன்.

''வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்,
உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்
என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி அம்மையே!
என்னும் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே
அருளிச் செய்தார்.''

- காரைக்காலம்மையார் புராணம். 58.

நக்கீரர் நுட்பமாக உணர்த்தும் கருத்தினைச் சேக்கிழார் விரித்து நிறுவும் விளக்கமே இவ்வரலாறு என எண்ணி மகிழ்வோம்.

### இயங்கும் எலும்பு

நக்கீரர் காட்டும் மற்றொரு காட்சி திருவாவி நன்குடி முனிவர்தம் முருக வழிபாடு. அம்முனிவர் பால் பட்டாடை இல்லை, பட்டை ஆடை தான், மரப் பட்டையாலாகிய உடைதான். வலம்புரிச் சங்குபோல் வெளுத்தது அவர்தம் நரைமுடி. எலும்புக்கூடு எழுந்து நடப்பது போன்றது அவர்தம் உடம்பின் இயக் கம். பலநாள் உண்ணாமையால் உலர்ந்து வாடியது அவர்களின் திருமேனி. வஞ்சமும் பகையும் நீங்கியது அவர்தம் நெஞ்சகம். கற்றோரும் அறியாப் பேரறிவு. கற்றோர்க்கு எல்லையாய் நிற்கும் கல்வித் தலைமை. காமமும் சினமும் கடிந்த ஞானம். உடம்பு மெலி யினும் உள்ளம் மெலியாத திண்மை. பகைவரையும் வெறுக்காத பண்பு. மனவலிமையேயன்றி உடல்வலி மையில்லாத இம்முனிவர் முருகன் திருமுன் முற்படச் சென்று வழிபடுகின்றனர்.

### வலிமை சால் மூவர்

திருவாவிநன்குடியில் பிறிதொரு காட்சி. முப் பெருந்தலைவர் வருகின்றனர். வலிமை மிக்கவர் அவர். வெற்றிக்கொடி உயர்த்திய வீரம் படைத்தவர் அம்மூவரும். அவருள் ஒருவன் கண்ணன் ஒற்றைக் கண்ணன், செந்தாமரைக் கண்ணன். தனது கண்களில் ஒன்றைப் பறித்து இறைவனை அருச்சித்துச் சக்கரப் படை பெற்றுப் பகைவெல்லும் திறல் எய்திய திரு மால்தான் இவன். நஞ்சுடைப் பாம்பும் அஞ்சிப் புடைக்கும் கருடக்கொடியை உயர்த்திய நெடியோன் இவன். மற்றொருவன் முக்கண்ணன். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகிய உருத்திரன். வெள்ளேற்றினை வெற்றிக்கொடியாக ஏந்திய பிறவா யாக்கைப் பெரி யோன் இவன். இன்னொருவன் ஆயிரங்கண்ணன். இவன்தான் தேவர் கோமானாகிய இந்திரன் நூறு வேள்வி செய்து பகைவரை வென்ற வீராதிவீரன். இவ னுக்கு மற்றவருக்கு இல்லாத தனிச்சிறப்பு ஆயிரம் கண். இவன் ஏறும் யானைக்கும் மற்ற யானைகளுக்கு இல்லாத பெருங்சிறப்பு, நான்கு கொம்பு. நாற்கொம் புடைய யானைமீது ஆயிரங்கண்ணுடைய இவ்வீரன் ஏறிச்செல்வான். வலிமையும், வீரமும் வெற்றியும்

நிறைந்த இப்பெருந்தலைவர் மூவரும் முருகன் திரு முன் சென்று அவனைப் போற்றுகின்றனர்.

### அரசரும் ஆண்டியும் ஆண்டவன் திருமுன்

எல்லா வகையிலும் வல்லவராகிய இம் முருகப்பெருந்தலைவர். மாறாத வலிமை தவிரப் பிறவலிமையில்லாத முனிவர்கள். இவ்விரு திறத்தாரும் முருகன் திருமுன் வேற்றுமை ஒழிந்து ஒன்றுபட்டு வழிபாடு செய்து அவனருள் பெறுகின்றனர். இவ்வரிய காட்சியைத் திருவாவினன்குடியில் காட்டுகிறார் நக்கீரர். ஆண்டவன் திருமுன் அரசர் இவர் ஆண்டி அவர் என்னும் உயர்வு தாழ்வுகள் நில்லா. இவ்விருதிறத்தாரிலும் முனிவர்களே யாவர்க்கும் முற்பட்ட முருகன் திருமுன்னர் சென்று நின்று வழிபடுகின்றனர். எல்லாம் வல்ல முப்பெருந் தலைவரும் பிறரும் பின்னே சென்று நிற்கின்றனர். ''உருவும் திருவும், வீரமும் வெற்றியும், செல்வமும் செல்வாக்கும், பிற வலிமைகள் அனைத்தும், மாறாத அன்புடைய மனவலிமைக்குப் பின்தான்'' என்னும் உயரிய கடவுள் தத்துவத்தை விளக்கும் இடம் இதுவாகும். படையும் குடையும் கொடியும் முதலான வலிமைகள் யாவும் பெற்ற அரசன் பெரும்பொருட் செலவில் கட்டிய திருக்கோயிலுக்கு எழுந்தருளுவதற்கு முன்னர், அவ்வலிமைகள் யாவும் அற்ற, அன்பே உருவாகிய பூசலார் புனைந்த மனக்கோயிலுக்கு எழுந்தருளினான் இறைவன்.

நின்றவூர்ப் பூச லன்பன் நெடிதுநாள்
நினைந்து செய்த
நன்றுநீ டாலயத்து நாளைநாம் புகுவோம்
நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின்
கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்

- பூசலார் நாயனார் புராணம் 10.

முருகாற்றுப்படை கூறும் வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரங்கொடுக்கும் வரமாக நிற்கும் இறைமாண்பினை விரித்துவிளக்கும் பெரியபுராண வரலாறு இஃது என உணர்ந்து தெளிவோம்.

### கல்வி அந்தணர்

அடுத்துத் திருவேரகத்துக்கு வருவோம். இங்குக் கல்வியும், அறிவும் ஒழுக்கமும் சான்ற அந்தணப் பெருமக்களைக் காண்கிறோம். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழிலும் தவறாது இயற்றும் அந்தணர் இவர். நாற்பத்தெட்டாண்டு வரை, திருமணம் புரிந்து கொள்ளாமல், இளமையைப் பேணி வேதநெறியில் நின்றவர் இவ்வறிஞர். வேள்விக்கு உரிய முத்தீயே இவர்தம் பெருஞ்செல்வம். முப்புரி நூல் அணிந்த மார்பினர். நீராடியநின் ஈரஆடை உடுத்தி இறைவனை வழிபடும் ஒழுக்கம் நிறைந்தவர். கைகளைத் தலைமேல் குவித்து ஆறெழுத்தாகிய அருமறை மந்திரத்தை உச்சரித்து, மலர்தூவிச் செவ் வேளின் திருவடிகளை வழிபட்டு, அவனருள் பெறும் இயல்பினர் இவ்வந்தணப் பெரியோர்.

### கல்லா வேடர்

பின்னர் குன்றுதோறாடலில் காண்பது கல்லாக்குடிமக்கள் காட்சி. நாற்பத்தெட்டாண்டு இளமைகாக்கும் இயல்பு இன்றிப் பதினாறாண்டுடையான் பன்னீராண்டுடையாளைக் காதலித்து, மணந்து, இருபாலரும் கைகோத்துக் கூடியாடும் மலைவாழ்வோர் கூட்டம் இது. வேள்வியில் தேவர்க்கிட்டு உண்ணாமல், வேண்டிய பொழுது வேண்டிய அளவு, மூங்கில்குழாயில் முற்றவைத்த கள்ளைச் சுற்றத்துடன் உண்டுகளிக்கும் தெருக்கூட்டம் இது. தனித்து, அமைதியாக, ஓரிடத்திருந்து, வெளியே புலப்படாதவாறு மந்திரம் ஓதி வழிபடும் மறைவழிபாட்டை இவர் அறியார். அதற்கு மாறாக, கூட்டம்கூடி, தொண்டகப் பறைகொட்டி, ஆரவாரத்துடன் குரவையாடி வழிபடும் கும்மாளக் குறவர் கூட்டத்தினர் இவர். இவர்கள் விரையுறு நறுமலரேந்தி அவற்றை இறைவனுக்குத்தூவி வணங்குவாரல்லர். காட்டில் மலரும் குல்லையும் முல்லையும் மல்லிகையும் பிறவும், இறைவன் அவனுக்காகப் படைத்தன அல்ல, குறமக்களாகிய தங்களுக்காகவே படைத்தான் எனக் கருதுவர். அம்மலர்களையும் இலைகளையும் கொடியிற் பின்னி மார்பிலும் இடையிலும் தாமே அணிந்து கொண்டு இறைவனை வழிபடுவர். வேதநெறி கல்லாது வேட்டைநெறி ஒன்றே கற்ற இக்குறவரும் முருகனை வழிபட்டு அவனருள் பெறுகின்ற காட்சியைக் குன்றுதோறாடலில் காண்கிறோம். பழமுதிர் சோலையிலும் இதனோடொத்த காட்சியையே காணலாம்.

### கல்வி கல்லாமை கடவுள் திருமுன்

நான்கு வேதங்களையும் முற்றக் கற்ற அந்தணர் ஒருபுறம், வேட்டையைத் தவிர வேறொன்றும் கல்லாத குறவர் மற்றொருபுறம். நாற்பத்தெட்டாண்டு பிரமசரியம் காக்கும் அந்தணர் அங்கே. பதினாறாண்டும் பன்னீராண்டும் நிரம்புவதற்குள் காதல் தொடங்கும் குறவர் இங்கே. திருக்கோயில் உள்நின்று

செவ்வேளை வழிபடும் அறிஞர் அங்கே. காட்டிலும் மலையிலும் பிறவெளியிலும் கடவுளை நினைக்கும் வேடர் இங்கே. இங்ஙனம் கல்வியந்தணரும் கல்லா வேடரும் முருகன் திருமுன் வேறுபாடின்றி ஒன்று பட்டு அப்பெருமானைத் தாம்தாம் விரும்பியவாறு வணங்கி வழிபட்டு அவனருளைப் பெறும் திருக் காட்சி நம் உள்ளத்தை உருக்குகின்றது. கல்லார்க்கும் கற்றவர்க்கும் பொதுவாய் நின்று ஒத்த அருள்புரியும் இறைவன் இயல்பை எடுத்துக்காட்டும் பகுதி இஃது எனலாம். வேதாகமங்களில் வல்ல சிவகோசரியார் ஆண்டாண்டுகளாகச் செய்துவந்த ஆகம வழிபாட் டினை ஏற்று அருள்புரிதற்கு முன்னம், கண்ணப்ப வேட்டுவனார் ஆறுநாள் அன்புவழிபாட்டை ஏற்று அருள்புரிந்தான் காளத்திநாதன்.

"பேறினி இதன்மே லுண்டோ பிரான்
திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப
உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்கொண்
டென் வலத்தில்
மாறிலாய்! நிற்க என்று மன்னுபேர்
அருள்பு ரிந்தார்."

- கண்ணப்ப நாயனார் புராணம், 185.

இது திருத்தொண்டர் புராணம். கல்லா வேட ரைக்

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்"

எனப் போற்றி அப்பேரன்புக்கு அடிமையாகின் றார் சுந்தரர். இது திருத்தொண்டத்தொகை. நக்கீரர் கூறும் இறைப் பொதுமையை சேக்கிழாரும் சுந்தரரும் உணர்ந்து போற்றும் திறன் அறிந்து இன்புறுவோம்.

★★★

**முருகுக் கனியில் முற்றிய சாறு**

அழகுடை நல்லார், அழகிலாப்பொல்லார், எல்லாம் வல்லார், ஒன்றும் மாட்டார்; அனைத்தும் கற்றார், எதுவும் கல்லார் என்னும் வேறுபாடுகளுக்கும், உயர்வுதாழ்வுகளுக்கும் இறைவன் திருமுன் இடமே இல்லை. நல்லாராயினும் பொல்லாராயினும், வல் லாராயினும் மாட்டாராயினும், கல்லாராயினும் கற்றா ராயினும் இன்னும் பிற எவ்வகை வேறுபாடுடை ராயினும் சரி, அன்னார் அன்பு ஒன்றுமட்டும் உடை யாராயின் அவ்வேறுபாடனைத்தும் ஒழிந்து, அவ னடியவராய் அனைவரும் ஒத்து, உயர்ந்து இறைவன் திருமுன் நின்று அவன்றன் திருவருளைப் பெறுதற்கு உரியவராவார். எம்பெருமான் இவ்வெல்லோர்க்கும் பொதுவில் நின்று அருள் புரிதற்கு உரியவன். கடவுளின் இவ்வுயரிய பொதுமைத் தத்துவத்தைக் காட்ட எழுந்த திருப்பாட்டே நக்கீரர்பெருமான் பாடிய திருமுருகாற்றுப்படை. திருமுருகாற்றுப்படையை ஓதி உணர்ந்து தெளிந்த வள்ளல் இராமலிங்க அடி களார், அம்முருக்கனியின் முற்றிய, 'இறைவனது பொதுமைத்தத்துவமாகிய, சாற்றைப்பிழிந்து, அவர் தம் திருவருட்பா என்னும் பொற்கிண்ணத்தில் வடித் துத் தருகிறார், பருகி மகிழ்வோம்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும்
களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்
அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும்
நலமே!
எல்லோர்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற
சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையும்
அணிந்தருளே.

## மனத்தைத் தினமும் தூய்மை செய்ய வேண்டாமா?

பாத்திரங்களை அன்றாடம் துலக்குகின்றோம்
பற்களையும் அவ்வாறே துலக்குகின்றோம்.
உடுத்தும் ஆடைகளைத் தினமும் தோய்க்கின்றோம்
கண்ணாடி முதலியவற்றையும் தினம் துடைக்கின்றோம்
நம் மனதை அவ்வாறே தினமும் தீய எண்ணங்கள்
சேராமல் தூய்மை செய்ய வேண்டும்.
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

- திருக்குறள்

# தமிழ் நாட்டின் தன்னிகரில்லாக் கவிஞன்

- அங்கயற்கண்ணி அடிமை

தமிழ்நாட்டின் கவிச் சக்கரவர்த்தி கம்பர் என்பர். அவர் பத்தாயிரம் பாடல்கள் பாடியருளினார் என்பர். தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டில் தமிழ்த் தாயின் கொடி பட்டொளி வீசிப்பறக்கச் செய்து, பல மாணவர்களை உருவாக்கித் தமிழை வளர்த்து, நூறாயிரம் பாடல்களுக்கு மேல் பாடி, 'பத்துக் கம்பர்' எனப் பெயர் பெற்ற உத்தம கவிஞர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். 'அவர் தொடாததில்லை, தொட்டுப் பொன்னாக்காதது இல்லை' என் ஒரு ஆங்கிலக்கவிஞனைக் கூறினர். அது நம் பிள்ளை யவர்களுக்குப் பொருந்தும். அவரது அழகிய பலகருத் துக்களைத் 'திருக்கோயில்' வாசகர் களுடன் பகிர்ந்து கொண்டு அனைவரும் இன்புறச் செய்ய வேண்டும் என்பதே இக்கட்டுரையாளனின் நோக்கம்.

தற்காலம் சோழநாட்டின் தென்கரையில் குற்றாலமென வழங்கும் தலம் பண்டைக்காலத்தில் திருத்துருத்தி என்ற பெயருடன் விளங்கியது. பிள்ளையவர்கள் திருத்துருத்தி விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களின் மீது இரண்டு பதிகங்கள் பாடியதுடன் திருத்துருத்திப் புராணமும் பாடினார்.


''எவர் உனது அருள் பெற வேண்டுமானாலும் விநாயகப் பெருமானே! உனை வணங்கினால்தான் காரியம் நிறைவேறும். இல்லாவிட்டால் நிறைவேறாது என்ற உண்மையை அடியேன் உணர்ந்ததாலே உன்னைப்பாடுகிறேன். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி, உன்பாதம் வணங்கி அறிவு பெறத் துதிக்கிறேன். மலரிடும் அடியர் மனத்தில் வாழ்வோனே! வணங்குபவருக்குக் கதியானவனே! குற்றமில்லா வாழ்வுடையோனே! தேவருலகம் நிகர்த்த திருத்துருத்தி வாழும் விநாயகனே!'' எனப்பாடுகிறார்.

1. எந்த வானவர் அருள் பெறக்கருதினாலும்
உனை ஏத்தி வழிபடுவர்: எழுவர்.
ஏத்திவழிபடல் செய்யாரெனில் அவர்
எண்ணியது இழந்து இடையூறு உறுவரால்:
முந்த ஆர்வம் பெருகுமாறு நின்னடிப்பூசை
முற்றும் புரிந்து போற்றின்
முன்னிய அனைத்தும் முற்றாதது அலவே!
இந்த முறைமை நானுணர்தலாலே
பந்தமாமல கன்மமாயை ஒரு மூன்றையும்
பாற்றி நின் அறிவு தொழிலாம்
பாத நிழல் புக்கு இன்புறுமாறு நின்னையே
பற்றித் துதித்தல் செய்வேன்
கந்தமாமலர் இடுநர் எய்ப்பில் வைப்பே!
புகழ்நர் களைகனே! அமலவாழ்வே!
கற்பத் தலத்திலும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக்களிற்று முகனே.

சென்ற நூற்றாண்டின் கவிசக்கரவர்த்தியான பிள்ளையவர்களையோ, அவரது மாணாக்கரான தமிழ்த் தாத்தா அவர்களையோ அடியேன் தரிசிக்க முடியவில்லை. பிள்ளையவர்களின் கவிதையில் தோய்ந்து அவரை ஒரு தெய்வமாக எண்ணும் அடியேன் அவர் கூறியுள்ளபடி ''எந்தக் காரியத்தை எடுத்தாலும் விநாயகப் பெருமானை வணங்கி னால்தான் பலிக்கும் என்பதை நினைவில் கொண்டு அப் பெரியாரைப்பற்றி எழுதும் இக்கட்டுரைகள் நன்கு அமைந்து நம் தமிழ் நாட்டினர், இம்மாபெரும் கவிஞரின் கற்பனைகள் நிறைந்த அத்தனை நூல் களையும் படித்து இன்பமுற வேண்டுமென்று விநாயகப்பெருமானை அப்புலவர் பெருமான் வாக்கினாலேயே முதற் கவியாக ஆரம்பித்து விநாயகரை வணங்குகின்றேன்.

2) திருத்துருத்தி முருகனை அவர் அழைப்பதே மிக அழகாக அமைந்துள்ளது. வேடுவர் குலக் கொடி (வள்ளி) படரக்கூடிய மரம் போன்றவனே' தெய்வயானை எனும் பெண் (பிடி) கலந்து விளையாடும் களிறே! (ஆண்யானையே)
தவஞ்செய்வோர் இதய கமலமான தாமரையில்
ஊறும் தேனே!
ஆயிரஞ்சூரியர்கள் தோன்றியமாதிரி
அடியவர்க்கு அருளும் காட்சியே!
உலகினர் வேதனைத் தீயால் நொந்துவணங்கக்
கருணைமழை பொழியும் மேகமே
உனை வணங்குபவரை என்றும் தேவர்களே
வணங்குமாறு செய்யும் நிதியே!

3) ஞானசம்பந்தர் திருமணஞ் செய்து கொண்ட தலம் திருப்பெருமண நல்லூர்; இன்று ஆச்சாள் புரம் என வழங்குகிறது. ஞானசம்பந்தரின்



மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

திருமணத்தன்று அங்குள்ள பஞ்சாட்சரத் தீர்த்தத்தின் கரையில் நின்று அம்மை அடியார்களுக்குத் திருநீற ளித்தருளியதால் அம்மையின் பெயரே **திருவெண்ணீற் றுமை** என்பது ஆகும். அவ்வம்மையின் மீது நம் பிள்ளையவர்கள் பிள்ளைத் தமிழ் பாடியபோது சில அழகிய கற்பனைகள் நிறைந்த செய்திகளைக் கூறு கிறார்.

இந்த நூலின் காப்புப்பருவத்தில் திருமகளை வணங்குகிறார். ''திருமணமானபின் பெண்களுக்குத் தத்தம் பிறந்த வீட்டில் பெருமை கிடையாது என்பது பொய்யாகும் வண்ணம், தன் பிறந்த வீடாகிய பாற் கடலிலேயே தன் கணவனைத் தன்னுடன் வாழச் செய்து தன் கணவனான திருமால் ஆயர்பாடியில் உறி களில் உள்ள பால் முதலானவற்றைத் திருடியவன் என்ற அவப் பெயர் நீங்கச் செய்து கணவனைப் பெருமைப்படுத்திய திருமகள்'' எனப் பாற்கடலில் திருமகளும் திருமாலும் வாழ்ந்ததற்கு அழகிய கற் பனைக் காரணம் கூறுகிறார்! அம்மட்டோ!

*4)* உலகில் பெண்மகவைப் பெறுவது தாழ் வான ஒரு தன்மை என அன்றே நினைத்தனர் போலும்! ''ஆண்மகனையடைவதுதான் சிறப்பு: பெண்மகவை அடைவது அவ்வளவு சிறப்பில்லை. பெணணைப் பெறுவது துயரம் பெற்றமாதிரி என்றும் பெண் என்பது நமது துயரத்தின் உருவமே என்றும், பெண் ஒரு செல்வமா? என்றெல்லாம் பேசுவதுடன் திருமணஞ் செய்து கொண்ட மணமக்களுக்கு ''ஆண்மகவைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று ஆசி கூறக்கூடியவர் கள் வாய் நாணிக் கூச்சமடைந்து பேசாதிருக்கச் செய் வதற்கு, தாயே! நீ மலையரசனுக்குப் பெண்ணாகப் பிறந்த பெருமையை என் சொல்லிப் புகழ்வேன்''' எனப் பெண்ணின் பெருமையைத் திருவெண்ணீற் றுமை செங்கீரைப்பருவத்தில் பாடியருளினார்.

*5)* திருச்சிக்கருகாமையிலுள்ள திருவானைக் காவில் எழுந்தருளியுள்ள அகிலாண்டநாயகியம்மை யின் மீது பாடியுள்ள பிள்ளைத்தமிழில் ''மேகங் களையே தொடுமளவு உயர்ந்த மாடங்கள் நிறைந்த நான்மாடக்கூடல் எனும் மதுரையில். மீனாட்சி யம்மையாகத் தோன்றிய தாயே! உன் அன்னையான காஞ்சனமாலையின் மடியிலிருந்து தவழ்ந்து வரும் போது உன் தந்தையான மலையத்துவஜபாண்டியன் கைநீட்டி அழைக்க, அவன்மீது ஏறி, அவனது குண்டலங்களை இரு கைகளாலும் பற்றி அவனது மார்பிலிருந்த இரண்டு மாலைகளிலும் அமர்ந்து ஊஞ்சலாடி வளர்ந்து, அனேகாயிரம் பெண்கள் சூழ, பல நாடுகளையும் வெனறு உன் மீன் கொடியை நாட்டி, கைலை சென்று எம் தந்தை ஆகிய சிவ பெருமா னுடன் போர் புரிந்தவளே, செங்கீரையாடி அருள் வாயாக! என்கிறார்.

*6)* திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள் ளைத் தமிழின் வருகைப் பருவத்தில் உள்ள

பொன்னே வருக! மூவுலகும் பூத்தாய்
வருக! நாயேனைப்
புரந்தாய் வருக! வழுதியர் கோன்
புதல்வீ வருக! முகிற்கு இளைய
மின்னே வருக! மெய்ஞ்ஞான விளக்கே வருக!
மறை நான்கின்
விரிவே வருக! பேரின்ப வீளைவே
வருக! மிகுங் கருணை
அன்னே வருக! அகநெகுவார்க்கு அணியாய் வருக!
அலர்மடவார்க்கு
அரசே வருக! உரைப்பருஞ்சீர் அம்மே
வருக! அழற்கரத்து
மன்னேருடலம்பகிர்ந்த இளமயிலே!
வருக! வருகவே!
மதமாதங்கத்து மடமானே வருக வருகவே!

என்ற பாடலைப் பிள்ளையவர்கள் பாட இந்த எளிமை யான இனிய பாடல் அமைப்பைக் கண்டு அனை வரும் மகிழ்ந்தனர் என்பர்.

*7)* திருச்சி உறையூரில் எழுந்தருளியுள்ள காந்திமதியம்மை மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். சிறுகுழந்தைகளை அன்னையர் கையில் தாங்கிக் கொண்டு நிலாவைக்காட்டி 'என் குழந்தையுடன் விளையாட வா' என அழைக்கும் அம்புலிப்பருவம் பாடுவது பிள்ளைத்தமிழில் மிகக் கடினமானது என்பர். நம் பிள்ளையவர்கள் ''ஏ! நிலவே! உன்னைக்காட்டி லும் என் அம்மை மேன்மையானவள். நீ ஒரு முயலை

உன்னிடம் கொண்டுவளர்க்கிறாய். பர சமய கோளரியான ஞான சம்பந்தப் பெருமானையே வளர்த்தவள் இவ்வம்மை. (கலைமை மான் எனக்கூறுவர்) நீ மானையுடையவள். இவ்வம்மையோ உயிருக்குயிராகப் பெருமானை (இறைவனை) உடையவள். நீ களங்கமுடையவள். இவ்வம்மை களங்கமேயில்லாதவள் என்பது மட்டுமல்ல, தன் அடியவர்களின் பிறப்பு இறப்புக்களான களங்கம் நீக்குபவள். அறியாதவரும் அறிவுள்ளோரும் கூட உன்னை அம்மைக்கு நிகரல்ல என்று அறிவர். அப்படியிருந்தும் இவள் உன்னைத் தன்னுடன் விளையாட அழைக்க என்னபுண்ணியம் செய்தாயோ என அம்மையின் பெருமையை சந்திரன் அறிந்து விளை யாட வருமாறு அழைக்கின்றார்.

*8)* கும்பகோணத்திலுள்ள மங்களாம்பிகை அம்மன் மீது இவர் பாடியுள்ள பிள்ளைத் தமிழ் மிக அழகியது. ''ஏ! சந்திரனே! உன்னை மதித்து இவ்வம்மை வாவென அழைத்து நீ வரவில்லை. நாங்கள் ''தாயே! உன் முக அழகு தன்னை மீறிய அழகாக உள்ளதால் சந்திரன் வெட்கங்கொண்டு வரவில்லை'' எனச் சமாதானப்படுத்தியுள்ளோம். அவள் அழைத்து நீ வராதிருந்தால் அவ்வம்மை கண் சிவந்து கோபம் கொண்டால், உன்னை எவருமே காப்பாற்ற முடியாது. அவ்வம்மையின் கோபத்தை யாரும் அடக்கவே முடியாது. இவளது நாயகரான கும்பேசுவரர் (கும்பகோணத்தில் சிவபெருமானுக்குப் பெயர்) உடலில் அணிந்துள்ள ஒரு பாம்பை ஏவினால் உன்னை அது விழுங்கி விடும். அம்மையின் கணவரான கும்பேசுவரர் மகாவீரர். எனவே நீ உய்ய வேண்டின் அம்மையுடன் விளையாட உடனே வா!'' என அழைக்கிறார்.

## தேங்காய் உடைப்பதன் தத்துவம் என்ன?

தேங்காய்க்கு மேலே உள்ள மட்டை மாயா மலம். உரித்து எடுக்கின்ற நார்கள் கன்மமலம். சந்நிதியில் உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம். இம்மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படும். மும்மலம் நீங்கி, இறை நிலை தரவேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவதன் தத்துவமே தேங்காய் உடைப்பதன் தத்துவம் ஆகும்.

*9)* திருச்சிக்கு அருகில் உள்ள வால்குடி என்ற ஊரில் எழுந்தருளியுள்ள திரு பெருந்திருப்பிராட்டி என்ற அம்மன் மீது பிள்ளைத் தமிழ் பாடினார். தேவர்கள் மற்ற யாவராலும் வணங்கப்பெற்று அருந்ததி வசிட்டர் ஆகியோர் எழுந்தருளித் தாரை வார்க்கும் சடங்கைச் செய்ய, சிவபெருமானைக் கைப்பிடித்தாயன்றோ! அத்தகைய கைகளைக் கொட்டி (இதைச் சப்பாணிப்பருவம்) விளையாடியருள்க'' என்கிறார். திருக்கல்யாண வைபவம் பூராவும் இப்பாடலில் விவரிக்கப்பட்ட காவியச் சித்திரம் இதோ!

கனியுயர் வானமணப்பந்தரின் மறை நாதன்
மகம்புரிய:
நாரணன் முதலியர் பணிதலை நிற்ப,
நயம் பெறு கண நாதர்
முனிவர் ஹர ஒலி செய்திருகைகள்
முகிழ்ப்பப் பல்லியம் ஏழ்
முகிலொலி சாய்ப்ப: அரம்பையர் வாழ்த்து
முழக்க: கடிமலர்வாழ்
வனிதையர் நின்னை அணிந்து பணிந்து
மணத்தவிசேற்ற: அவண்
மங்கலமாமுனி பன்னியொடும் புனல்
வாக்க: மகிழ்ந்தேற்றுக்
குனிமதி வேணியர் தொட்ட கரங்கொடு
கொட்டுக சப்பாணி!
கொடிகொள் தவத்துறை அடிகள் இடத்தவள்
கொட்டுக சப்பாணி.

- பெருந்திருப்பிராட்டி பிள்ளைத்தமிழ் சப்பாணி - 8

*10)* இனி அவர் பாடியருளிய ஆண்பால் பிள்ளைத் தமிழில் அவர் கூறியுள்ள அழகிய கருத்துக்களைக் காண்போம். திருவிடைக்கழி என்னும் தலத்திலுள்ள முருகப்பெருமான் மீது அவர் பாடியருளிய பிள்ளைத்தமிழில் (சிறு பெண்கள் மணல் வீடு கட்டி விளையாட அவற்றை ஆண்குழந்தைகள் காலால் இடறிக் கலைப்பதைப் 'சிற்றில் பருவம்' என்பர்.) முருகனைத் தமதுகையால் கட்டிய மணல் வீடுகளை அழிக்க வேண்டாமெனப் பெண்கள் வேண்டிக் கொள்வதை மிக அழகாக அமைத்துள்ளார்.

''உன் அடியார்களின் அறியாமையை உன் திருவடியால் உதைத்து அழிக்கவேண்டும். அவர்களது முன் பிறவிப்பாவத்தை அழி. அவர்கள் பிறக்க வேண்டும் என்று பிரமன் எழுதும் ஏட்டைச் சிதைத்து அவரைப் பிறவாது காப்பாற்று. நீ உண்மைத் தெய்வமென உணராதவர்களின் எண்ணத்தைச் சிதைத்து அழி. சிறுகுழந்தைகளான எங்கள் சிறுவீடுகளை அழிக்காதே என்கின்றனர்.

''எம்பெருமானே, சரவணப் பொய்கையில் நீ ஆறு குழந்தைகளின் உருவாக விளங்க உன்னை அம்மை வாரி எடுத்து மகிழ நீ ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உடைய ஒரே உருவம் கொண்டது எங்கள் நற்பேறு. பன்னிரண்டு கைகள் மாதிரி பன்னிரண்டு கால்களுடன் பிறந்திருந்தால் எங்கள் சிறுவீடுகளை எவ்வளவு வேகமாக அழித்திருப்பாய்'' என விநோதமாகக் கேட்கிறார்.

***11)*** பிள்ளையவர்களின் நூல்களில் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் மிக மிகப் பிரசித்தமானது! தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிஞரும், பக்தருமான சேக்கிழார் பெருமானைக் குழந்தையாக எடுத்துப் பேணிப் பெருமைப் படுத்தி வழிபட்ட அழகிய நூல் சேக்கிழார் பிள்ளைத் தமிழ். சேக்கிழார் பெருமான் 63 நாயன்மார்களின் பக்திப் பெருக்கை பாடி அழகு படுத்தியதை நம் பிள்ளையவர்கள் **பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்பாடிய கவி வலவ!** என அழைத்து மகிழ்கிறார்.

சொல்லும் பொருளும் அழகாக அமைய, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், கெட்ட சொற்களேயில்லாது, ஒத்துக்கொண்டு வெற்றி கிடைக்கும் படியான முரண்பாடுள்ள செய்திகளைக்கூறி, நல்லன வற்றையே கூறி, அல்லாததை விலக்கி. முதன் நூலைப் பின்பற்றி அடியார் பெருமையைக் கல்லும் கரையக் கவிபாடும் பெருமானே! அப்படிப்பாடியருளிய வாய் முத்தம் அளித்தருள்க'' எனப்பாடுகிறார். ஒரு வரலாற்றை ஒரு கவிஞன் எவ்வாறு இயற்ற வேண்டும் என்று வழிகாட்டுவது போல் இச் செய்யுள் அமைகிறது.

மகாவித்வான் பிள்ளையவர்கள் இருந்த காலத்தில் நாமும் இருந்து அவரது கவிதைகளை அவரிடம் நேரில் கேட்கும் பேறு பெறவில்லையே என ஏக்கம் உண்டாகிறது. நூலாசிரியரைக் காணவோ அவரது இன்மொழியைக் கேட்கவே முடியாத நாம் அப்பெருமகனாரின் கவிதையைப் படித்து அனுபவிக்கும் பேறு பெற்றதை எண்ணி இன்புறுவோமாக! வாழ்க அப்பெருமானின் திருநாமம்! வாழ்க அவர்தம் மரபு! வாழிய செந்தமிழ்.

திருச்சிற்றம்பலம்

★★★

## வாசகர் எண்ணங்கள்

''சிவபெருமான் 108 போற்றி'' மூவர் தேவாரத்திலிருந்தும், திருவாசகத்தில் இருந்தும் தொகுக்கப்பட்டு வழங்கப்பட்டது அருமை. அவனருளால் அவன் தாள் வணங்கத் தெய்வத் தமிழ் அருச்சனை கண்கண்ட மருந்தாகும்.

**- அ. அருள்செல்வி,**
சென்னை - 15.

''வைகுண்ட ஏகாதசி'' விரத மகிமையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டியது ஆசிரியரின் கட்டுரை. இவ்வாண்டிலிருந்து ஏகாதசி விரதம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்து விட்டோம் நாங்கள்.

**- ஆர். சாந்தி,**
சேலம் - 636 006.


சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு வாசியுடன் வழங்கிய காசு, குற்றமுடைய காசு அல்ல. அருமை நிறைந்த காசு என்பதைச் சித்தாந்த வித்தகர் ஆறுமுகம் அவர்கள் விளக்கியிருந்தது புதுமையும் அருமையும் மிக்க விளக்கம் ஆகும்.

**- என். தமிழ்ச்செல்வன்,**
திருவரங்கம்.

இறைவன் தன் எல்லையில்லாக் கருணையின் காரணமாகவே உயிர்களைத் தண்டித்துத் திருத்தி ஆட்கொள்கின்றான் என்பதை டாக்டர் பழ. முத்தப்பன் அவர்களுடைய ''தண்டிப்பதும் கருணையே'' என்ற கட்டுரை நன்கு தெளிவு படுத்தியது.


**- சிவப்பிரகாசம்,**
அம்மாப்பேட்டை.

★★★





பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த திருஆவினன் குடி அருள்மிகு குழந்தை வேலாயுதசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 25.11.98 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் இணை ஆணையாளருமான திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்களும், அறங்காவலர் பெருமக்களும் இவ்விழா ஏற்பாடுகளை மிகச்சிறப்பாகச் செய்திருந்தார்கள்.



மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் அருள்மிகு வடபழநி ஆண்டவர் ஆலயத்தில் ''அருள்மிகு முருகவேள் போற்றி'' நூலை வெளியிட சென்னை இணை ஆணையாளர் திரு. கோ. பக்கிரிசாமி, பி.ஏ.பிஎல். அவர்கள் நூலைப் பெற்றுக் கொள்கிறார்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.**, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.